மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 6 / ஜூன் 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-




## கல்விக் கொள்கையல்ல காவிக் கொள்கை



## மோடி முகம்



## அணு உலைக் கழிவால் நிகழும் அழிவு



அறநெறிமக்கள் கட்சி தலைவர் விசவனூர் வேதளபதி, மற்றும் பொறுப்பாளர்கள் சிதம்பரம் தொகுதியில் வெற்றி பெற்ற நேரில் சென்று முனைவர் தொல் திருமாவளவனுக்கு வாழ்த்து தெரிவித்தனர்



அறநெறிமக்கள்கட்சியினர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

மனிதமே முதன்மை!
# முற்றம்
பல்சுவை இதழ்
Mutram monthly June 2019

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**எஸ்தர்ரோஸ்லின்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

கல்விக் கொள்கையல்ல – காவிக் கொள்கை
– தலையங்கம்........ 4

மோடி முகம்........ 6

பாரன் ஹீட் பிறந்த கதை........ 8

சிவப்பு சித்தாந்தத்தின் சிறப்பு
– ராஜ சங்கீதன்........ 10

வெற்றியை சிதம்பரம் தொகுதி மக்களுக்கு
காணிக்கையாக்குகிறேன்
– தொல் திருமாவளவன்........ 15

எங்கள் மண்........ 16

முன்னுரிமை வர்த்தக நாடுகள்
பட்டியில் இருந்து இந்தியா நீக்கம்
அமெரிக்கா அதிரடி........18

வடநாட்டான் வயசுக்கே வரல?!
– தோழர் சின்னையன் காசி........ 20

சுந்தந்திரம் கூட எனக்கில்லையடா (கவிதை)
– கவிஞர் இராமன்........ 21

தமிழிசை நிர்மலாசீதாராமன் – ஒரு ஒப்பீடு
– சைதை மணிமாறன்........ 22

மஞ்சள் காமாலையும் மருத்துவமும்
– சோ. தில்லைவாணன் சித்த மருத்துவர்........ 24

கூடங்குளம் அணு உலைக் கழிவால் நிகழும் அழிவு........ 26

சுப.வீரபாண்டியன் திறந்த மடல்........ 28

ஒரு மார்வாடியின் குரல்........31

ஜெய்சங்கர் நடித்த மார்டன் தியேட்டர்
படம் மாதிரியே கீது........ 33

பா.ஜ.கவை முந்திய நோட்டா........ 34

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



பத்து லட்சத்து நாற்பதாயிரம் பள்ளிகளையும் ஐம்பதாயிரம் உயர்கல்வி நிறுவனங்களையும் உள்ளடக்கியது இந்திய கல்வித்துறை. மேற்கண்ட கல்வி நிலையங்களில் முப்பது கோடி மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கல்விக் கொள்கை என்ற நிலையில் 1986ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கையில் 1992 ஆம் ஆண்டு திருத்தம் கொண்டு வரப்பட்டது.

2014ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக நாங்கள் ஆட்சிக்கு வந்தால் புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவோம் என்று பாரதிய சனதாக் கட்சி கூறியது. அதன்படி பா ச க ஆட்சிக்கு வந்ததும் ஸ்மிரிதி இரானி மனதவள மேம்பாட்டுத்துறை அமைச்சரானார். 2016ஆம் ஆண்டு புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவதற்காக முன்னாள் அமைச்சரவைச் செயலாளர் டி.எஸ்.ஆர்.சுப்பிரமணியன் தலைமையில் மத்திய அரசு குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழு 2017ஆம் ஆண்டு, மே மாதம் தனது அறிக்கையை மத்திய அரசிடம் தாக்கல் செய்தது. இந்த அறிக்கை பற்றியும் புதிய கல்விக் கொள்கை பற்றியும் விரிவாக அலசி ஆராய்ந்து முடிவு எடுக்க இஸ்ரோ முன்னாள் தலைவர் கே. கஸ்தூரிரங்கன் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட புதிய குழு ஒன்றை ஜூன் மாதம் நடுவண் அரசு அமைத்தது.

# கல்விக் கொள்கையல்ல காவிக் கொள்கை





கஸ்தூரி ரங்கன் தலைமையிலான நிபுணர்கள் குழு கல்வி தொடர்பான பல்வேறு அம்சங்களையும் ஆய்வு செய்து, விரிவாக ஆலோசனை நடத்தி தேசிய கல்விக் கொள்கை தொடர்பான தனது வரைவு அறிக்கை புதிதாக பதவி ஏற்றுள்ள மத்திய மனிதவள மேம்பாட்டுத்துதுறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியாலிடம் வழங்கப்பட்டது. அந்த அறிக்கை மனிதவள மேம்பாட்டுத் துறை இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

விண்வெளி ஆய்வாளர் ஒருவரின் தலைமையில் கல்வித் திட்டம் வகுப்பது ஏன்? கல்வியாளர்களே இந்தியாவில் இல்லையா? அந்தக்குழுவில் ஒரு தமிழர்கூட இல்லை. உலகத்துக்கே நாகரிகத்தை, கல்வியைத் தந்த தமிழர்கள் இதற்கு தகுதியில்லாதவர் களாக ஆகி விட்டார்களோ தெரியவில்லை. கல்வித்துறையில் 217 பேரைச் சீர்சால் பெருந் தகைகள் என்று பட்டியலிட்டுள்ளார்கள். இதில் தமிழ்நாட்டிலிருந்து இரண்டு பேர் மட்டுமே இடம்பெற்றுள்ளதைப் பார்க்கையில் திட்டமிட்டுச் செய்யப்படும் செயலாகத்தான் தெரிகிறது. இது மட்டுமல்லாது, தமிழைக் குறிப்பிடும்போது தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, பாலி, பெரிசியன் என்னும் பட்டியலை விரிக்கும் இந்த அறிக்கையாளர்கள் சமஸ்கிருதத்தைக் குறிப்பிடும் போதெல்லாம் விரிவாக அதன் பெருமைகளை விளக்கிச் செல்கிறார்கள். காளிதாசன், பாசன் என்றெல்லாம் சமஸ்கிருதப் புலவர்களின் பெயர் சொல்லிப் பாராட்டுகின்ற இந்த ஆட்கள் திருவள்ளுவரைப் பற்றியோ, தொல்காப்பியரைப் பற்றியோ குறிப்பிடவில்லை என்பது மோசடித்தன மாகும்.

அந்த அறிக்கை 483 பக்கங்களைக் கொண்டதாக இருந்தது. அந்த அறிக்கையில் மும்மொழிக் கொள்கை, தனியார் பள்ளிகளின் கல்விக் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தொடர்பான பரிந்துரைகள் இடம்பெற்று உள்ளன. அவைகளில் இந்தியாவில் மும்மொழிக் கொள்கை தொடர்நது நீடிக்க வேண்டும். அதை நாடு முழுவதும் அமல்படுத்த வேண்டும். இந்திய மொழி பேசாத மாநிலங்களில் அந்த மாநில தாய்மொழி, ஆங்கிலம் ஆகியவற்றுடன் இந்தி மொழியை கற்பிக்க வேண்டும். இந்த நடைமுறை ஆறாம் வகுப்பில் இருந்து தொடங்க வேண்டும் என்பதோடு பல கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**சமஸ்கிருதத்தைக் குறிப்பிடும் போதெல்லாம் விரிவாக அதன் பெருமைகளை விளக்கிச்செல்கிறார்கள். காளிதாசன், பாசன் என்றெல்லாம் சமஸ்கிருதப் புலவர்களின் பெயர் சொல்லிப் பாராட்டுகின்ற இந்த ஆட்கள் திருவள்ளுவரைப் பற்றியோ, தொல்காப்பியரைப் பற்றியோ குறிப்பிடவில்லை என்பது மோசடித்தனமாகும்.**

ஆறாம் வகுப்பிலிருந்து கட்டாயமாக இந்தி புகுத்தப்படுவதற்கான இந்த வெளியீட்டைத் தொடர்ந்து இருமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற மாநிலங்கள் கொதித்தெழத் தொடங்கிவிட்டன. முக்கியமாக தமிழகம் வெப்பத்தின் உச்சநிலைக்குச் சென்று விட்டது. பல இயக்கங்கள் எதிர்ப்புக் குரல் கொடுக்கத் தொடங்கியதும் நடுவண் அரசு பின் வாங்கியிருக்கிறது. எதிர்ப்பு இல்லாதிருந்தால் மும்மொழிக் கொள்கை நடைமுறைப் படுத்தப் பட்டிருக்கும். இம்மாதிரியான நிகழ்வுகள் பாசக அரசால் அவ்வப்போது நடத்திக் காட்டப்பட்டு வருகின்றது.

கொள்கை முடிவு என்று ஒன்றை அறிமுகப் படுத்துவதாகக் கூறி இணையத்தில் வெளியிடுவது. இதைப்பற்றி கருத்துச் சொல்ல விரும்புகிறவர்கள் சொல்லலாம் என்று ஒரு குறுகிய கால அவகாசத் தைத் தருவது, யாரும் கண்டு கொள்ளாவிட்டால் அதை சட்டமாக்கி நடைமுறைப்படுத்துவது. எதிர்ப்புத் தெரிவித்தால் அதை விலக்கிக் கொள்வது என்று தங்களுடைய காவிக் கொள்கைகளை தொடர்ந்து அமல்படுத்த முயன்று கொண்டே இருக்கிறது நடுவண் அரசு. அரசின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் உன்னிப்பாக மக்கள் கவனித்துக் கொண்டிருக்க வேண்டிய நெருக்கடி நிலையை பொதுமக்களுக்கு எப்போதும் கொடுத்துக் கொண்டே இருக்கிறது ந மோ அரசு. ●

# மோடி முகம்



உயர்திரு பாரதப்பிரதமர் மோடி அவர்களுக்கு,

வணக்கம், நீங்கள் அரியானாவில் சொல்லிய படியே மிகச்சரியாக 300 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று அசுர பலத்தோடு ஆட்சியில் மீண்டும் ஏறுகிறீர்கள் வாழ்த்துக்கள். இந்த வாழ்த்தைச் சொல்ல என் மாநிலம் எனக்கு ஒரு தகுதியை கொடுத்திருக்கிறது. நாடெங்கும் மோடி அலை வீசிய போது இங்கு வீசவில்லை. ஓர் சாரணர் இயக்க தேர்தலில் கூட உங்கள் தேசியச் செயலர் 50 ஓட்டுகள் கூட வாங்க முடியவில்லை, சட்டமன்ற தேர்தலிலும் அப்படியே, இப்போது நாடாளுமன்றத் தேர்தலில் அப்படியே. இப்படி தெளிவாக உங்களை தள்ளி வைத்த அந்த தகுதியே என் தகுதி.

உங்கள் கட்சியின் மாநில தலைவர் தமிழிசை சொல்கிறார். மோடிக்கு வாக்களிக்காமல் விட்டதால் தமிழகத்திற்கு பல நல்ல திட்டங்கள் கிடைக்க வாய்ப்பில்லை என்கிறார்...அப்படியா? இது தான் உங்கள் கட்சி புரிந்து வைத்திருக்கும் அரசியல் சட்டமா? தனக்கு வாக்களித்த மக்களுக்கு மட்டும் செயல்பட சொல்லியிருக்கிறதா? கடந்த ஐந்தாண்டுகள் அப்படித்தான் செயல்பட்டீர்களா? பாருங்கள் உங்கள் கட்சியே உங்கள் நிர்வாக லட்சணத்தை இப்படி காட்டிக்கொடுக்கிறது. இது ஒரு சாம்பிள் இது போல இவர் உளறிக்கொட்டியது, இவரைப் போன்றவர்கள் உளறிக்கொட்டியது அதிகம். இப்போது தெரிகிறதா நாங்கள் ஏன் உங்களை ஏற்கவில்லை என்பது...

உங்கள் ஆட்சியில் தமிழகத்தில் மட்டும் கடந்த ஐந்தாண்டு களில் 18 ரைடுகள் நடந்தன. தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் அலுவலகம் முதல் கடைசியாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் வீடு வரை. ஆனால், எத்தனை வழக்குகள் பதிவாகின மோடி அவர்களே? எண்ணிக்கூட பார்க்க வேண்டிய அவசியமில்லை. எல்லாமே மிரட்டல் அல்லது கமிசன் வாங்கத்தானோ அந்த ரைடு எல்லாமே? இது இந்தியா முழுமைக்கும் நடந்தது. உங்கள் ஆட்சியில் இது ஊழலில் சேராதா? ஊழல் கேவலம் எனில் ஊழலில் கமிஷன் மகா கேவலமில்லையா? இது போன்ற ஊழல்களை வைத்து மெஜாரிட்டி இல்லாத அரசை நீங்கள் ஆண்டீர்கள். ஆள மட்டுமா செய்தீர்கள் கல்வியைக் கெடுத்து, விவசாயத்தைக் கெடுத்து மாநில ஒற்றுமையைக் கெடுத்து...எங்கள் உரிமைகளை பறித்து...இப்போது தெரிகிறதா நாங்கள் ஏன் உங்களை ஏற்கவில்லை என.

இரண்டு பெரும் புயல்களை சந்தித்து தமிழகம். அப்போது டிவிட்டரில் கூட நீங்கள் பெரிதாக கேட்கவில்லை. ஏதோ ஒரு நடிகையின் திருமணத்தில் பிசியாக இருந்து விட்டீர்கள். ஆனால் அதற்கான நிதியைக் கூடகொடுக்கவில்லை என நான் சொல்லவில்லை. உங்கள் தமிழக ஏஜெண்ட் ஓபிஎஸ் சட்டமன்றத்தில் சொன்னார்...அதுவும் பதினேழாயிரம் கோடி என சொன்னதாக நினைவு...இது ஒரு பக்கமெனில்..எங்கள் தமிழின மீனவர்களை உங்கள் கடற்படையினர் சுட்டுக்கொன்றனர். ஆமாம் எங்கள் குண்டுதான் என காவற்படையினர் சொல்ல, இல்லை என்றவர் உங்கள் குறுக்குவழி அமைச்சர். கடைசிவரை அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை இன்று வரை. இது போக, புயலில் சிக்கிய மீனவர்களை காக்க கப்பற்படை விமானங்கள் கேட்ட போது வரவில்லை அவர்கள் உப்பு நீரில், உடல் உப்பி மிதந்தார்கள். நீங்கள் மெதுவாக வந்து அந்த புகைப்படங்களை பார்த்தீர்கள். இப்போது தெரிகிறதா நாங்கள் ஏன் உங்களை ஏற்கவில்லை என.

நீங்கள் வேண்டுமானால் இப்போது தான் பல மாநிலங்களுக்கு மின்சார கொடுத்திருக்கலாம் சாலை

போட்டிருக்கலாம். மருத்துவக்கல்லூரி கனவுகளைக் கொடுத்திருக்கலாம் (அப்படியேதும் இல்லை அது வேறு விசயம்) ஆனால் நாங்கள் அதையெல்லாம் தாண்டி வந்துவிட்டோம். உங்கள் குஜராத்தைவிட கல்வியில், வேளாண்மையில், சட்ட ஒழுங்கில், மருத்துவத்தில், சுற்றுலாவில் குறிப்பாக மத ஒற்றுமையில் நாங்கள் பல மடங்கு மேல் ஒன்றை தவிர அதானியின் நலனுக்காக நீங்கள் கொண்டுவந்த சோலர் பிளாண்டுகள் வகையில் மட்டுமே உங்கள் மாநிலம் முதன்மை. ஆனால் இதுவும் இப்போது இல்லை இங்கே சுயமாகவே பலர் சோலார் நோக்கி நகர்கிறார்கள். காரணம் அடிப்படை அறிவு உங்களைவிட எங்களுக்கு அது அதிகம் யாரை எங்கே வைப்பது என எங்களுக்கு தெரியும் உங்கள் நடிப்பையெல்லாம் நாங்கள் அதிகம் சினிமாவில் பார்த்துவிட்டோம். அந்த சினிமாகூட பார்க்க முடியாத மக்களை உங்களால் ஏமாற்ற முடிந்தது. எங்களை ஏமாற்ற முடியவில்லை. இப்போது தெரிகிறதா நாங்கள் ஏன் உங்களை ஏற்கவில்லை என..

இன்னும் இருக்கிறது மோடி அவர்களே சொன்னால் நீண்டுகொண்டே போகும். ஆனால் பாருங்கள், சம்மட்டியால் ஓங்கி அடித்திருக்கிறது தமிழ்நாடு. உங்கள் சகாக்களுக்கு ஜனநாயகம் என்றால் என்னவென தெரியாமல் கூட்டாட்சி, மாநில சுயாட்சி என எதுவும் புரியாமல் நீங்கள் திணித்த நீட்போல, ஜிஎஸ்டி போல, பணமதிப்பிழப்பு போல, உங்கள் கட்சி மூடர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள் அதாவது நாங்கள் உங்களுக்கு ஓட்டுபோடவில்லை. அதனால் காவிரி முதல் முல்லைபெரியாறு வரை உங்களிடம் ஏதும் கேட்க கூடாது என்கிறார்கள் என்ன ஒரு அறிவு பாருங்கள்...உங்களை போல..

அதே ரோசத்தோடு வரியை வேண்டாமென சொல்ல சொல்லுங்கள். இந்தியாவில் 40% ஜிடிபி நாங்கள் அல்லவா? சொல்லச் சொல்லுங்கள் எங்கள் வரியை வைத்து நாங்களே எங்களை சரி செய்து கொள்கிறோம். இல்லை எனக்கு அதையெல்லாம் தீர்த்து வைக்கும் வக்கில்லை எனசொல்லுங்கள் கேட்கிறோம். இல்லை தமிழ்நாடு தனியாக இருந்துகொள்ளட்டும் சொல்லுங்கள் முடியுமா? வாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்துதான் பிரதர். இதை நீங்கள் புரிந்தால், அதன் படி தமிழகத்தை வஞ்சிக்காத திட்டங்களை கொண்டுவந்தால் எப்போது வேண்டுமானாலும் வரலாம். அல்லது உங்கள் கட்சியினர் சொல்வது போலத்தான் என்றால்.. தமிழர்கள் எதற்கும் துணிந்து நிற்பார்கள்.

ஏனெனில், உங்களுக்கு புரியாது...எங்கள் குடி மூத்தகுடி. நீங்கள் ஓசைகளில் இருந்த போதே நாங்கள் இலக்கணத்தை உருவாக்கிவிட்டோம். அது கொடுத்த அறிவு யாருக்கும் அஞ்சி நிற்காது. உங்கள் இயக்க மூதாதையர்கள் வரலாறு. எல்லாம் ஆங்கிலேயர் களுக்கு மன்னிப்பு கடிதம் கொடுத்து விசுவாசம் காட்டி வாழ்ந்த வகையறா. ஆனால் இங்கே, போடா புண்ணாக்கு என தூக்கு மேடை ஏறி நின்றவர்கள். உங்களைவிட (?) நன்றாக ஆட்சி செய்த வாஜ்பாய்க்கு கிடைக்காத வாய்ப்பு உங்களுக்கு கிடைத்திருக்கிறது இனியாவது ஆளுங்கள் ஆள்வதை போல செய்தி பரப்பாதீர்கள்.



# எருக்கன் மருத்துவம்

எருக்கன் இலை" இது நீங்கள் மரம் நட்டு தண்ணீர் ஊற்றி வளர்க்கும் செடி அல்ல அப்படி நீங்கள் வளர்க்க வேண்டிய அவசியமும் இல்லை, தெரு ஓரங்கள், பராமரிப்பு இல்லாத வயல்கள் ஏன் சுடுகாட்டில் கூட இந்த செடிகள் வளரும். இது மழை காலமோ, வெயில் காலமோ இரண்டிலும் அசராது இருக்கும். அதாவது சுமார் 12 ஆண்டுகள் வரை இந்த செடியால் தண்ணீர் இன்றி இருக்க முடியும். சரி இந்த செடி எதனால் எமக்கு லாபம் தருகிறது? இதில் அப்படி என்ன தான் இருக்கிறது? கேட்டால் ஆச்சர்யபடுவீர்கள்

வெள்ளெருக்கனை மாந்தீரீக சம்பந்தமான காரியங் களுக்கும் பயன்படுத்துகின்றனர் எல்லாமே மருத்துவ குணம் உடையன. மலர் பூத்துப் பிஞ்சாகி, காயாகி கொத்தாக இருக்கும். சுமார் 7-9 செ.மீ.நீளத்துடன் 3-4 செ.மீ. கனமுள்ளதாக இருக்கும். நன்கு முற்றிய பின் வெடித்து பஞ்சாக மாறி காற்றில் பறந்து சென்று விழுந்த இடத்தில் இனப்பெருக்கம் செய்யும். தமிழகத்தின் எல்லாப் பகுதி களிலும், தானே வளர்கிறது.


**மருத்துவப் பயன்கள்:** இதன் பால் தீ போல சுடும். பட்ட இடம் புண்ணாகும். புழுக்களைக் கொல்லும். விஷக்கடிகளை குணமாக்கும். பயிர்களுக்கு எதிர்ப்பாற்றலைத் தரும். இலை நஞ்சு நீக்கல், வாந்தியுண்டாக்குதல், பித்தம் பெருக்குதல், வீக்கம், கட்டிகளைக் கரைத்து வேதனை குறைதல் ஆகிய குணங்களை உடையது. பூ, பட்டை, ஆகியவை கோழைய கற்றுதல், பசியுண்டாக்குதல், முறைநோய் நீக்குதல் ஆகிய பண்புகளையுடையது.

**பாம்பு – தேள் கடி :** இதன் இலையை அரைத்து 5 கிராம் அளவு பாலில் சாப்பிடவும். விஷம் இறங்கும். எலிக்கடிக்குக் கொடுக்கலாம்.

**குதிங்கால் வலி:** பழுத்த இலையை குதிங்கால் வீக்கத்தின் மீது வைத்து, சுட்ட செங்கல்லை அதன் மீது ஒத்தடம் கொடுத்துவர குணமடையும்.

மலக்கட்டு - 20 மி.லி. சிற்றாமணக்கு எண்ணெயில் 3-5 துளி எருக்கன் பால் விட்டுக்கொடுக்க மலச்சிக்கல் தீரும்.

# 'பாரன்ஹீட்' பிறந்த கதை





முனைவர். **த. சித்தார்த்தன்,**
நிகழ்ச்சிப்புரிவு முன்னாள் தலைவர்,
வர்த்தக ஒலிபரப்பு, சென்னை வானொலி.


108 டிகிரி வெயில் கொளுத்தியது என்று செய்தி வருகிறது 100 டிகிரி காய்ச்சல் என்று பேசிக் கொள்கிறார்கள். வெப்பநிலை இப்படி பலவாறாக அதிகம் அளவிடப்பட்டு வருகிறது. பழங்காலத்தில், மனிதர்கள் உள்ளுணர்வின் அடிப்படையில் வெப்பத்தை அறிந்திருந்தனர். பனிக்கட்டி குளிர்ச்சியாக இருக்கிறது. நெருப்பு சூடாக இருக்கிறது என்பது தெரியக்கூடியதுதான். வெப்பத்தின் சிக்கலான தன்மைகளை அறிவதற்கும், வெப்ப நிலையை துல்லியமாக அளவிடுவதற்கும் வெகுகாலம் பிடித்தது.

ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் தண்ணீர் கொதிக்கும். ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் இரும்பு உருகும். இப்படி வெப்பத்தின் தாக்கம் ஒவ்வொரு பொருள் மீதும் ஒவ்வொரு விதமாக இருக்கிற காரணத்தால், பலவிதமான வெப்பநிலை அளவுகளை தனித்தனியாகத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருந்து வந்தது.

வெப்பத்தின் காரணமாக காற்று விரிவடையவும், சுருங்கவும் செய்யும் என்பதை அந்தக் காலத்தில் அறிந்திருந்தனர். இதன் அடிப்படையில், நீளமான குழாயினுள் குளிர்ந்த நீரை நிரப்பி, அதன் மேல் காற்று நிரம்பிய கண்ணாடிக் குமிழை வைத்து ஒரு விதமான கருவியை 1952ஆம் ஆண்டில் கலிலியோ உருவாக்கினார். கண்ணாடிக் குமிழில் இருக்கும் காற்று வெப்பத்தினால் விரிவடைந்த போது, கண்ணாடிக் குழாயில் இருந்த தண்ணீர் கீழே இறங்கவும், வெப்பம் குறைந்து காற்று சுருங்கியபோது கண்ணாடிக் குமிழ்கள் மேல் நோக்கி உயரவும் செய்தன.

இப்படி ஏற்படக்கூடிய மாற்றத்தைக் கொண்டு காற்றின் வெப்பம் அல்லது குளிர்நிலையைக் காண்பிக்க முடிந்தது. கலிலியோ உருவாக்கியது வெப்பம் வேறுபடுவதை மட்டுமே காட்டக்கூடிய தெர்மோஸ்கோப் எனப்படும் சாதனம் ஆகும். வெப்பத்தை அளந்தறியக்கூடிய அளவுகோல் இவற்றில் கிடையாது. பின்னர் செய்யப்பட்ட முயற்சிகளில் கண்ணாடிக் குழாயில் திரவத்தை நிரப்பி அதனை இறுக மூடி வைத்த குழாயின் மீதிருக்கும் அளவீடுகளின் மூலம் திரவத்தின் நகர்வைப் பார்த்து வெப்பநிலையைக் கண்டறியும் முறை கண்டறியப்பட்டது. ஆனால், அதனைக் கொண்டும் வெப்பத்தைத் துல்லியமாக அளவிட முடியவில்லை.

மிகவும் நவீனமான வெப்ப அளவியை 1709ஆம் ஆண்டு ஜெர்மனியைச் சேர்ந்த பாரன்ஹீட் கண்டுபிடித்து உருவாக்கினார். மயிரிழை போன்ற ஒரு மெல்லிய தந்துகிக் கண்ணாடிக் குழாயினுள் பாதரசம் வைக்கப்பட்டிருந்தது. பாதரசத்தைச் சூடேற்றி விரிவடையச் செய்து தந்துகிக் குழாயினுள் உள்ள காற்று வெளியேற்றப்பட்டது.

இந்தக் குழாய் பிறகு இறுக அடைக்கப்படடது. இதனால், பாதரசம் இடையூறு ஏதுமின்றி வெப்ப நிலைக்கு ஏற்ப விரியவும், சுருங்கவும் செய்கிறது. கண்ணாடிக் குழாயின் வெளிப்புறத்தில் எண் களினால் அளவுகள் குறிக்கப்பட்டு மூடப்பட்டி



ருந்தது. இந்த எண் அளவீடு பாரன்ஹீட் அளவீடு எனப்பட்டது. தண்ணீரின் உறை நிலையை 32 டிகிரி என்றும், அதன் கொதி நிலையை 212 டிகிரி என்றும் கணக்கிட்டு இவற்றை கீழ் மேல் அளவு களாக பாரன்ஹீட் வைத்திருந்தார். தனது அளவீட்டு வரிசையை 96 அளவுப் புள்ளிகளாக பாரன்ஹீட் பிரித்தார். வெப்ப நிலையை அளவிடு வதில் ஒரு சீரான தர நிலை இவரது முயற்சியினால் எட்டப்பட்டது.

பிறகு இதே நூற்றாண்டில் ஆண்டர்ஸ் செல்சியஸ் என்பவர் சென்டிகிரேடு அளவையை உருவாக்கினார். இந்த அளவையில் நீரின் உறைநிலை பூஜ்யம் டிகிரி செல்சியஸ். கொதிநிலை 100 டிகிரி செல்சியஸ். பாரன்ஹீட் அளவையின் 96 அளவுப் புள்ளிகளுக்குப் பதிலாக 100 அளவு புள்ளிகளை செல்சியஸ் ஏற்படுத்தினார்.

பூஜ்யம் என்பதை தொடக்க அளவாகக் கொண்ட வெப்பத்தை அளவிடும் முறையை லார்டு செல்வின் என்பவர் கொண்டு வந்தார். ஒரு சிறிது கூட வெப்பமே இல்லாத நிலையே அறுதி பூஜ்யம் எனப்படுகிறது. இது மைனஸ் 459.67 டிகிரி பாரன்ஹீட்டிற்கு சமமானது. செல்வின் வெப்ப அளவு முறை விஞ்ஞான ஆராய்ச்சி களில் தான் அதிகமாகப் பயன்பட்ட வருகிறது.

வெப்ப அளவை மானிகள், இரண்டு பகுதிகளைக் கொண்டி ருக்கும். ஒன்று வெப்ப உணர் விக்குமிழ், இன்னொன்று அளவுக் குறியீடு. வெப்ப மானி என்பது ஒரே கண்டுபிடிப்பில் உருவானது அல்ல, அது படிப்படியாகத் தொடர்ந்து வளர்ச் சியடைந்து வந்த ஒன்றாகும். நவீன வெப்பமானிகள் இப்போது உருவாக்கப் பட்டுள்ளன. அகச் சிவப்புக்கதிர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி யும், நுண்ணிய மின் சுற்றுக்களைப் பயன்படுத்தியும் வெப்பநிலை மிகத் துல்லியமாக அளவிடப்பட்டு மின்னணுத் திரை யில் டிஜிட்டல் முறையில் எண் களாகத் தெரியும்படி செய்யப்படு கிறது.

மிக அதிகமான வெப்பம் நிலவும் இடங்களில் பயன்படுத்தவதற்காக பிளாட்டினம் உலோகத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அளவிகள் இருக்கின்றன. மிகக் குறைவான வெப்பநிலைகளில் அளவிட வாயு வெப்பமானிகள் உதவுகின்றன. உடலைத் தோடாமலேயே நோயாளியின் உடல் வெப்பத்தை அளவிடும் அகச்சிவப்பு வெப்ப மானிகள் இப்போது வந்துவிட்டன. எத்தனைதான் வந்தாலும் பாரன்ஹீட், செல்சியஸ் எண் அளவைகளே இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன என்பது தான் சிறப்பாகும்.

வானிலை ஆராய்ச்சி, வானிலை முன்னறிவிப்பு, காற்றுமண்டல ஆராய்ச்சி, பனி உருவாகும் நிலை இருக்கிறதா என்பதை ஆராய்தல், காய்ச்சலைக் கண்டுபிடித்தல், குளிரூட்டிகள், சூடேற்றிகள் ஆகிய வற்றில் வெப்பமானிகள் பயன்பட்டு வருகின்றன.

தொழிற்சலைகளில் வெப்பநிலையைக் கண் காணிக்க சில வகை வெப்ப உணர்வுகள் பயன் படுகின்றன. வெப்பத்தைத் துல்லியமாக அளவிடும் நுட்பத்தை நமக்களித்த பாரன்ஹீட் 1736ஆம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் நாள் தனது 50 வது வயதில் காலமானார்.



# சிவப்பு சித்தாந்தத்தின் சிறப்பு

நாம் பேசும் கார்ப்பரேட் மூலதனம் மற்றும் சுரண்டல் ஆகியவற்றை நேரடியாக சந்தித்துக் கொண்டிருப்பது இந்த தலைமுறைதான்.

தங்களை கூலிகள் என அறிந்திராத கூலிகள்.

உண்மையை ஒரு கட்டத்தில் கார்ப்பரேட் நிறுவனம் முகத்திலடித்து உணர்த்தும். அப்பொழுதேனும் அவர்கள் நம்மை அடைந்திட அவர்களுக்கு அருகில் நாமிருக்க வேண்டும்.

கம்யூனிஸ்ட்டுகளுக்கான திறந்த மடல்.

பொதுவாக கட்சிகள், விமர்சனங்களை ஏற்பதில்லை. ஆனால் கம்யூனிஸ்டு கட்சிகள் தற்போது தங்கள் மீதான விமர்சனங்களை முன் வைக்குமாறு கேட்டிருக்கின்றன. கம்யூனிஸ்டுகள் இப்படிக் கேட்பது முதல் முறையல்ல. அந்த வழிதான் அவர்கள் தங்களை மீட்டுருவாக்கி வைத்திருக்கிறார்கள் அதுவே ஜனநாயகத்துக்கான வழியும்கூட.

கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை அதிகாரத்தில் குறைவதென்பது மிகவும் கவலைக்குரிய விசயம். எந்த சித்தாந்தமாக இருந்தாலும் அதன் முதல் எதிரியாக இருக்கக்கூடியது கம்யூனிச சித்தாந்தமே. ஏனெனில் எந்த சித்தாந்தம் பேசும் எல்லாவற்றையும் கம்யூனிசம் உள்ளடக்கியிருக்கும். அதனால் அதனுடன் அணுக்கமாக இருக்க வேண்டிய சித்தாந்தம் கூட எதிரியாகவே பாவிக்கும். ‘நீ படிச்ச பள்ளி தலைமையாசிரியர் நான்’ என சொல்லக்கூடிய தகுதி கொண்ட ஒரே சித்தாந்தம் கம்யூனிசம்தான். கம்யூனிசம் எதிர்க்கும் முதலாளித்துவவாதிகள்கூட தங்களின் பொருளி யலைப் பற்றி தெளிவாக கற்றுணர கம்யூனிசத் தையே படிக்கிறார்கள் எனில் அவர்களைப் பார்த்து, வளர்ந்து கொண்ட சித்தாந்தங்களின் லட்சணத்தை வேறு சொல்ல வேண்டுமா?

இந்தியாவில் கடந்த காலத்தில் கம்யூனிஸ்ட் டுகளின் நடவடிக்கைகள் மக்களுக்கு உவப்பான தாக இருக்கவில்லை. மக்களிடமிருந்து கம்யூனி ஸ்ட்டு களின் தூரம் அதிகரித்தபடியே இருந்திருக் கிறது. கம்யூனிஸ்ட் கட்சிகளின் நடத்தை கம்யூனிஸ்டுகளுக்கே உவப்பானதாக இருக்க வில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். கம்யூனிஸ்ட்டுகளின் சிறப்பே என்னவெனில், பிற கட்சியினரை போல், கட்சி என்ன செய்தாலும், அது எத்தனை அபத்தமானது எனினும் கண் மூடித் தனமாக தலையில் தூக்கிக் கொண்டு சங்கிகளின் பாணியில் கொண்டாடித் திரிய மாட்டார்கள். கட்சியின் தலைமைகள் மீது கடுமையான விமர்சனங்களை வைப்பார்கள்.

எல்லா கட்சி அலுவலகத்தின் செயற்குழு மற்றும் பிற கட்சிக் கூட்டங்களையும் ஒரு முறையேனும் சென்று பாருங்கள். கூழைக் கும்பிடுகளும், பல்லிளிப்புகளும், புகழ்ப் பாடல்களும் மட்டுமே இருக்கும். கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டங்களில் கடுமையான விமர்சனச் சண்டைகள் நிகழும். தனி நபர் சார்ந்த சண்டைகள் அல்ல. சித்தாந்தம் மற்றும் கொள்கை முடிவுகள் சார்ந்த சண்டைகள், ஏனெனில் அங்கிருக்கும் கம்யூனிஸ்ட்டை அந்தக் கட்சி வளர்த்திருக்காது. கம்யூனிசம் என்கிற சித்தாந்தமே வளர்த்திருக்கும். அந்தளவுக்கான ஜனநாயகம் இருக்கக்கூடிய கட்சியாகவே அவைகள் இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் தாண்டி இன்றைய யதார்த்த நிலை, கம்யூனிஸ்ட்டுகளின் பாராளுமன்ற எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதே.

அதிகாரத்தில் இல்லாததாலேயே ஒரு சித்தாந்தம் வீழ்ந்து விட்டதாக நினைக்கும் கும்பலில் ஒருவன் நானில்லை என்பதால் கம்யூனிஸ்ட்டுகளின் எண்ணிக்கை குறைவை வீழ்ச்சி என பெயரிடாமல், அணுகி எனக்கு பட்ட சில விமர்சனங்களை முன் வைக்கிறேன்.

தற்போதைய கம்யூனிஸ்ட்டுகளின் தோல்விக்கு முக்கியக் காரணம், இந்தியாவைச் சரியாக புரிந்து கொள்ளாததாக இருக்கலாம். தமிழில் ஒரு முக்கியமான வார்த்தை இருக்கிறது. ஒன்றியம் இந்தியாவைக் குறிக்க பலர் தமிழ்நாட்டில் ஒன்றியம் என்கிற வார்த்தையை பயன்படுத்துகிறோம். அந்த வார்த்தைக்கே மிகப்பெரிய அரசியல் இருக்கிறது. அந்த அரசியலைப் புரிந்து கொள்ள மறுத்ததிலிருந்தே கம்யூனிஸ்ட்டுகளுக்கான தோல்வி தொடங்கியதென எனக்குப் படுகிறது. இந்தியாவை நாடு என்பதற்கும் பல தேசிய இனங்களின் ஒன்றியம் என்பதற்கும் மிகப்பெரும் வித்தியாசம் இருக்கிறது.

நாடு என்கிற கருத்தியலில் இருந்து இந்திய மக்களை அணுகத் தொடங்குகையில் மக்கள் நிச்சயமாக நம்மை புறக்கணிப்பார்கள். தேசிய இனம் என்ற கருத்தியலில் இருந்து அணுகத் தொடங்குகையில் மட்டுமே மக்களை நெருங்க முடியும்.

தேசிய இன அழிப்பு கார்ப்பரேட் மூல தனத்துக்கு அவசியமாக இருக்கிறது. ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம் என்பது ஆர் எஸ் எஸ்ஸின் குரல் மட்டுமல்ல, பன்னாட்டு மூலதனத்தின் குரலும் அதுதான். ஒன்று போலிருக்கும் சந்தைக்குள் வியாபாரத்தைக் கொண்டு செல்வது லாபத்தை அதிகரிக்கும். பலவாறாக பிரிந்திருக்கும் சந்தைக்குள், வணிகத்தை பலவாறாகப் பிரித்து, திட்டமிட்டு கொண்டு செல்கையில், அதற்கான செலவு கூடும். இலாபம் குறையும்.

'இந்த கிரீம் தடவினால் இந்திய அழகு கூடும்' என விளம்பரம் செய்தால் மொத்த இந்தியாவிலும் விற்கலாம். 'இந்த கிரீம் பூசினால் தமிழர் அழகு மிளரும்' என விற்றால் தமிழ்நாட்டில் மட்டும்தான் வியாபாரமாகும். வணிகத்துக்கு தேசிய இனங்கள் இல்லாத இந்தியா தேவை. கம்யூனிசத்துக்கும் தேசிய இனங்கள் இல்லாத இந்தியாதான் தேவையா?

வேறு எந்த சித்தாந்தமும் பேசியிருக்காத காலத்திலேயே தேசிய இனங்களைப் பற்றியும் அவற்றின் சுயநிர்ணயம் பற்றியும் லெனின், ஸ்டாலின் பேசியிருக்கிறார்கள். ஆனால், இந்தியாவில் நாம் ஏன் அதை தவறவிடுகிறோம்?

தவறவிடவில்லையெனில், மாநில பிரதிநிதித்துவத்தையும் உரிமைகளையும் பொருட்படுத்தி அல்லது முன்னிலைப்படுத்தி பேசும் கட்சிகளாக ஏன் இருக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது.

நடந்து முடித்திருக்கும் தேர்தலில் பாஜக பெருமளவில் வெற்றியடையாத மாநிலங்கள் எல்லாம் எவையென பாருங்கள். தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, ஒடிசா போன்றவை. நான்கும் நான்கு மொழி தேசிய இனங்கள். இந்தியா என்கிற கருத்தியல் தின்று செறித்திடாத இடங்கள். இந்தியா என்கிற கருத்தியல் கொண்டிருக்கும் இந்தி மொழி, பார்ப்பன மனநிலை, இந்துத்துவம், வளர்ச்சிவாதம் நுழைந்திட முடியாத இடங்கள். அவற்றால் மட்டுமே பாசிசத்தை, பாஜகவை, கார்ப்பரேட்டைத் தூக்கி அடிக்க முடிகிறது. இவற்றைப் புரிந்து செய்திருக்க வேண்டியது கம்யூனிஸ்ட்டுகள் அல்லவா? ஆனால், நாம் அவற்றை கோட்டை விட்டோம்.

மேற்கு வங்காளத்தில் நிலச்சீர்திருத்தம் என விவசாயிகள் நலன் கொண்டு களம் கண்ட கட்சி, இந்தியா பேசும் வளர்ச்சிவாதத்தைக் கொண்டு, அதே விவசாயிகளை நோக்கி துப்பாக்கி திருப்பியதே மம்தாவுக்கான வாய்ப்பு ஏற்பட காரணம் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. மக்களுக்கான வளர்ச்சி வேறு, நிறுவனங்களுக்கான வளர்ச்சி வேறு என்பதை வேறு எவரைக் காட்டிலும் கம்யூனிஸ்ட்டுகள் அல்லவா புரிந்திருக்க வேண்டும்.

இந்தத் தேர்தலில் இன்னுமே கவனத்தில் கொள்ளப்பட எல்லாரும் தயங்கும் அல்லது அலட்சியமாகக் கருதும் வாக்குப்பதிவு இயந்திர முறைகேடுகளை பிறரைப் போலவே கம்யூனிஸ்ட்

டுகளும் புறக்கணித்தது ஏனோ? மதுரையில் எனக்குத் தெரிந்த அதிமுக நண்பன் ஒருவன் சொல்கிறான் இப்படி.

எல்லா கட்சியிலயும் காசெல்லாம் கொடுத்துக் கிட்டு இருக்காங்க. இப்போ எங்களுக்கு மெசினை எப்படி கையாளணும்னு தெரிஞ்சிடுச்சு. இனி அடுத்த எலெக்சன்ல எல்லாம் நாங்க காசு கொடுக்க மாட்டோம். ஸ்ட்ரெயிட்டா மெசின்தான் என.

பிற கட்சிகளும் இதே உத்தியை பயன்படுத் தலாம். ஆனால், இதுவே வழியென்றாகிய பின், இங்கு வாக்கு அரசியலையோ ஜனநாயகத்தையோ ஆட்சியிலிருப்பவனே முடிவு செய்வான் என்றே ஆகிறது. தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டுமென்பதை கொள்கையாகவே கொண்டி ருக்கும் கம்யூனிஸ்ட்டுகள் அந்த கொள்கையை ஒரு பிரச்சார இயக்கமாக இந்த நொடி கூட மாற்றாமல் இருக்கிறோமே?

பொருளாதார இட ஒதுக்கீட்டுக்கு ஓட்டுப் போட்டு, அதற்குப் பின்னிருக்கும் மண்டல் கமிசன் அறிக்கையையும் சுட்டிக் காட்டி, சாதிக்குள் இருக்கும் வர்க்கத்தை அடையாளம் காட்டவே பொருளாதார இட ஒதுக்கீட்டைக் கேட்பதாகச் சொல்லிக் கொண்டு, அதை இத்தனை காலமும் ஒரு பிரச்சாரமாக, தெளிவு கொள்ள வேண்டிய விசயமாக முன்னெடுக்கவில்லையே, ஏன்? அதை ஏதும் செய்யாமல் இத்தனை அவசரகதியில் ஓட்டுப்போட வேண்டிய அவசியம் ஏன்? இந்த 'ஏன்' களுக்கு எல்லாம் நம்மை விமர்சிப்பவர்கள் சுலபமாக சில பதில்களை கொடுத்து விடுவார்கள். ஆனாலும், நான் உங்களுக்கு ஓரளவு சமீபத்துடன் இயங்கி பார்த்திருப்பதால் கேட்கிறேன், ஏன்?

பாசக முன்னெடுத்த பொருளாதார இட ஒதுக்கீடு பாணி, நிச்சயமாக கம்யூனிஸ்ட்டுகள் முன்னெடுத்த 'வர்க்கத்தை அடையாளம் காட்டும்' பாணி கிடையாது. ஆனால் இப்போது ஓட்டு போட்டாகி விட்டது. நீங்கள் ஓட்டுப் போட்டு பாசக கொண்டு வரும் பொருளாதா இட ஒதுக்கீடு வர்க்கத்தை கண்டறியப் போகிறதா அல்லது பார்ப்பனர்களுக்கும் உயர்குடி சாதிகளுக்கும் வாய்ப்புகளை குவித்தளித்து, பிறருக்கான வாய்ப்புகளை இல்லாமலாக்கப் போகிறதா?

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விகிதத்தில் சாதிகள் இருப்பதாகச் சொல்லி அதன் காரண மாகவே அடித்தட்டு வர்க்கத்துக்கும் சாதகமாக இருக்கும் வகையில் பொருளாதார இட ஒதுக் கீட்டை ஆதரிப்பதாகச் சொல்கிறோம். ஆனால் அந்தப் பாணியில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு விதமான இட ஒதுக்கீட்டை அம் மாநிலத்தில் இருக்கும் சாதிகளின் சதவிகிதப்படி கொண்டு வருவோம் என கொள்கையில் இருப்பதை பிரச்சாரமாக்கி இருக்கலாமே! மிகத் தெளிவாக அது தேசிய இனங்களின் விடுதலையாகவும் சமத்துவ மாகவும் மாறி இருக்குமே. மண்டலும் சட்ட நாதனும் பேசுபவை அவைதானே.

அதற்கான பிரச்சாரத்தை முன்னெடுக்காமல் இத்தனை அவசரகதியில் கம்யூனிஸ்ட்டுகள் பேசும் பாணியிலான இட ஒதுக்கீட்டுக்கு நேரெதிர் பாணியில் பாசக கொண்டு வரும் இட ஒதுக்கீட்டுக்கு ஓட்டுப் போட்டது ஏன்?

நவதாராளமய காலத்துக்குப் பிறகு இந்தியாவின் பொருளியலை தீர்மானிப்பதில் தடுமாற்றங்கள் கம்யூனிஸ்ட்டுகளுக்கு இருந்திருக்கிறது. அது எங்குமே அணுகப்படாமல், அணுகப்பட்டாலும் மேலிருந்து கீழாக அணுகப்பட்டு வந்திருக்கிறது. தாராளவாதம் கொண்டு வந்து சேர்த்திருக்கும் அகரீதியான கலாச்சார சிக்கல்களையும் அதிர்ச்சி களையும் கையாள்வதில் மிகப்பெரும் புரிதலின்மை இன்னும் இருந்து வருகிறது.

இந்தத் தலைமுறையில் இருக்கும் ஃபிரெஸ் திங்கிங் கட்சிகளுக்குள் வர வேண்டியிருக்கிறது. ஏனெனில், நாம் பேசும் மூலதனம் மற்றும் சுரண்டல் ஆகியவற்றை நேரடியாகச் சந்தித்துக் கொண்டி ருப்பது இந்தத் தலைமுறைதான். தங்களை கூலிகள் என அறிந்திரா கூலிகள்! உண்மையை ஒரு கட்டத்தில் கார்ப்பரேட் நிறுவனம் முகத்திலடித்து உணர்த்தும். அப்பொழுதேனும் அவர்கள் நம்மை அடைந்திட அவர்களுக்கு அருகில் நாமிருக்க வேண்டும்.

கார்ப்பரேட்டின் பாதிப்புகளைப் புரிந்து கொண்டு, அதற்குள் இருக்கும் பார்ப்பனியக் கூட்டையும் அடையாளம் கண்டு, சுரண்டலை நிர்வாணமாக பார்த்துக் கொண்டிருக்கும் எத்தனையோ இளைஞர்கள் இருக்கிறார்கள். ஜல்லிக்கட்டுக்கு திரண்ட கூட்டம் மெல்ல நகர்ந்தது. கொகோ கோலா போன்ற பன்னாட்டு மூலதனத்தை எதிர்க்கவெனில் அந்தப் போராட்டம் உண்மையில் யாருக்கான போராட்டம்? கம்யூ னிஸ்ட்டுகள் வென்றெடுத்திருக்க வேண்டிய போராட்டம்.

நவதாராளமய இளைஞர்களின் அரசியல் தெளிவை கட்சிகள் அடையாளம் காண வேண்டும். அதே நேரத்தில் நவதாராளமயம் கொடுத்திருக்கும்

தன்முனைப்புக் கொண்ட இளைஞர்களையும் தவிர்க்க வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை தமிழர் நலன் சார்ந்து சிந்தித்து செயல்படுதல் மிகவும் முக்கியம். தமிழர் தேசிய நலன் என்ற வட்டத்துக்குள் கட்சி கம்யூனிஸ்ட்டுகள் வர வேண்டியது காலத்தில் தேவை.

சிங்காரவேலரை தமிழரின் கலாச்சாரத் தேவை மற்றும் வாழ்க்கைக்கு ஊடாகப் புகுந்து சம தர்மத்தை நிலைநாட்ட முயன்ற முனைப்பு வேண்டி யிருக்கிறது. அவர் பெரியாருடன் இணைந்து போட்ட ஈரோட்டுத் திட்டம் என்னும் 'சுய மரியாதை சமதர்ம வேலைத்திட்டம்' தான் இன்றளவும் தமிழ்க் கட்சி கம்யூனிஸ்ட்டுகள் செல்ல வேண்டிய திசை.

சிங்காரவேலர் பெரியாருடன் இணைந்தது யதேச்சையான நிகழ்வு அல்ல. தமிழர் வாழ்க்கையை மிகச்சரியாகப் புரிந்து கொண்டவர் பெரியார். இங்கிருக்கும் சாதி மற்றும் பார்ப்பனிய ஆதிக்க மனநிலைகளை களம் சென்று எதிர்த்துப் போராடியவர் பெரியார். அவர் பேசிய சுயமரியாதை மட்டுமே பார்ப்பனிய ஆதிக்கத்தை எதிர்க்கும் மனோபாவத்தை தமிழனுக்கு ஏற்படுத்தியது. சுயமரியாதை கொண்டு ஆதிக்கத்தை எதிர்த்த தமிழன் சமத்துவத்தை முன்னிறுத்துபவனாக இருக்க வேண்டுமென்பதுதானே சரியாக இருக்க முடியும்? அதை சிங்காரவேலர் புரிந்து கொண்டார்.

இன்னும் நாம் புரிந்து கொள்ளவில்லை!

மிகவும் முக்கியமான குறைபாடு ஒன்று கம்யூனிஸ்ட்டுகளிடம் இருக்கிறது. அறிவியல் என்றதுமே கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பது. கூடங்குளம் அறிவியல் அல்ல. நாசகாரம்! நியூட்ரினோ அறிவியல் அல்ல, முதலாளித்தவத் துக்கான அறிவியல்! இதை ஏன் புரிந்து கொள்ள கம்யூனிஸ்ட்டுகளுக்கு இத்தனை கஷ்டம்?

அறிவியல் என்பதாலும் ரஷ்யாவில் இருந்து வருகிறதென்பதால் மட்டுமே கண்ணை மூடிக் கொண்டு திட்டத்தை ஒப்புக் கொள்ளலாமா? ஆக்கபூர்வ அறிவியலுக்கும் நாசகார அறிவிய லுக்கும் வித்தியாசம் தெரியாதவர்களா நாம்?

கம்யூனிஸ்ட்டுகளுடைய தேசிய இன புரிதல் குறைபாடு எத்தனை பிரச்சினைக்குரியதாக மாறி யிருக்கிறது என்பதை மேலே உள்ள பத்திகளில் சொல்லியிருந்தாலும் அவை எல்லாவற்றுக்கும் உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம்.

ஈழப்பிரச்சினையில் கம்யூனிஸ்ட்டுகள் கொண்டிருக்கும் நிலைப்பாடு!

ஒருங்கிணைந்த இலங்கைக்குள் ஈழம் அமைவதைத்தான் லெனின், தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்கிறாரா?

இந்தியா என்கிற கருத்தியல் தொடர்ந்து பெருத்து வீங்கிக் கொண்டிருக்கிறது. வெடித்துவிடும் முன், அதைச் சரியாக அறுத்து தேசிய இனங் களுக்கான கூட்டமைப்பு என மாற்றும் சித்தாந்த பலம் பொருந்தியவர்கள் இந்தியாவிலேயே கம்யூனிஸ்ட்டுகள் மட்டும்தான். மேலும் இந்தியா வில் நிகழவிருக்கும் ரத்தச்சகதியான போரில் ஆர்எஸ்எஸ்க்கு எதிராக நின்று சமர் புரியக்கூடிய சித்தாந்தமும் வரலாறையும் போராளிகளையும் கொண்டதும் கம்யூனிஸ்ட்டுகள் மட்டும்தான்.

இவை எல்லாவற்றையும் புரிந்து கொண்டு கம்யூனிஸ்ட்டுகள் மீண்டெழ வேண்டுமென்று விரும்புகிறோம். மிக முக்கியமாக வங்காளத்தில் கம்யூனிஸ்ட்டுகளின் தோழர்களின் பலம் முற்றிலும் சிதறிப் போயிருப்பதையும் கவனத்தில் கொண்டு, ஆராய்ந்து, நாடெங்கும் உறுப்பினர்களைப் பெருக்கவும் அதற்கு உதவும் தலைமைகளும் உருவாக்கப்பட வேண்டுமென்பதே எங்களின் கோரிக்கை. ஏனெனில்,

First they came for the socialists, and I did not speak out-

Because I was not a socialist.

Then they came for the trade unionists, and I did not speak out-

Because I was not a trade unionist.

Then they came for the Jews, and I did not speak out-


Because I was not a Jew.

Then they came for me-and there was no one left to speak for me'

என்ற கவிதையை அறிந்திருக்கிறேன்.

கம்யூனிஸ்ட் அழிக்கப்படுகிறானெனில் மொத்த மக்களுக்குமான அழிவு தொடங்குகிறத என்றே அர்த்தம். புரிந்ததாலேயே இத்தனை பெரிய நட்புப்பூர்வ விமர்சனம், ஏனையோர் கேட்க மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் கம்யூ னிஸ்ட்டுகள் அல்ல.

**ராஜசங்கீதன்**



மதம் என்பதைப் பற்றி இதற்கு முன் "குடிஅரசு", "புரட்சி" முதலிய பத்திரிகைகளில் அநேக விசயங்கள் பல தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும்.

மதமானது இன்று உலகில் மனித சமூகத்தின் வாழ்வைத் துக்க மயமாக்கி, ஜீவராசிகளில் மனிதனுக்கென்று உள்ள பகுத்தறிவை அடிமைப்படுத்தி, ஒற்றுமையைக் குலைத்து மனிதனுக்கு மனிதன் வெவ்வேறு இனம் என்று எண்ணும்படி செய்து வருகின்றது என்பதற்கு உதாரணம் தேவையில்லை என்றே கருதுகின்றோம்.

"தேசிய சிங்கங்"களான அலி சகோதரர்கள் ஒரு காலத்தில் "தாங்கள் முதலில் மகம்மதியர்கள் பிறகுதான் இந்தியர்கள்" அதாவது முதலாவது மதம், பிறகுதான் தேசம் என்றும், "உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா" நான் இந்து மதத்தின் உருவே நான் மூச்சு விடுவதும், வாங்குவதும் இந்து மதத்திற்காகவே" நான் உண்பதும், உயிர் வாழ்வதும் இந்து மதத்திற்காகவே!! மதத்தைக் காக்கவே நான் சுயராஜ்யம் கேட்கின்றேன்! அதாவது இந்து மதம்தான் எனக்கு முதலும் கடைசியும் என்றும், பழைய காங்கிரஸ்வாதி, மாசற்ற தேசாபிமானி, ஒப்பற்ற தியாகி" என்று சொல்லப்பட்ட பண்டித மதன் மோகன்மாளவியா எனது மதத்தையும், எனது ஜாதியையும் காப்பதே எனது முதல் வேலை என்றும், அதாவது வருணாசிரமத்தைக் காக்கத்தான் நான் தேசியவாதி என்று சொல்லும்படி செய்து விட்டது என்றால் மதத்தின் ஆதிக்கத்திற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்?

**– பெரியார்..**

கவிதையே நீ
எத்தனை சிறப்பிற்கு உரியவள்
இறைவனை தனதாக்குகிறாய்
இயற்கையை உனக்குள் அடக்குகிறாய்
கவியாக உருவாக்குகிறாய்
மனிதனை வடிவமைக்கிறாய்
மானுடம் போற்றச் செய்கிறாய்
உலகையே ஆட்டிப்படைக்கிறாய்
உற்சாகப் படுத்துகிறாய்
சோர்வுற்ற உள்ளத்தில் புத்துணர்வு தருகிறாய்
படிக்கப் படிக்க இன்பமே
படைக்கப் படைக்க புது வடிவமே
வீசட்டும் உன் வாசம்
தொடரட்டும் திக்கெட்டும்
வாழ்க வளர்க கவிதையே

**பாவை புயல்**

## தென் ஆப்பிரிக்க முன்னாள் அதிபர் திரு. நெல்சன் மண்டேலா கூறியது :



நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பிறகு, நான் ஜனாதிபதியான பின் ஒருநாள் நான் எனது முதல் கட்ட பாதுகாப்புப் படையினருடன் நகரத்தில் உள்ள ஒரு உணவகத்துக்குச் சென்றிருந்தேன்.

அங்கு ஒரு உணவகத்தில் எல்லோரும் அமர்ந்தோம். அவரவர் தமக்கு விரும்பிய உணவுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு அமர்ந்திருந்தோம். அப்போது எனக்கு எதிர் மேசையை கவனித்தேன்.

ஒருவர் தனியாக உணவுக்காக காத்திருந்தார். எனது படைவீரனை அனுப்பி அவரை எம்முடன் வந்து ஒன்றாக உணவருந்தும்படி சொன்னேன். அவரும் தனது உணவுடன் எமது வட்டத்தில் வந்து அமர்ந்து கொண்டார். எல்லோரும் உண்டு முடிய அவரும் புறப்பட்டார்.

எனது படைவீரன் என்னிடம் சொன்னான்...அந்த மனிதர் பார்ப்பதற்கு மிகவும் நோய்வாய்ப்பட்டவராகத் தெரிகிறார். அவர் உண்ணும் போது கைகள் மிகவும் நடுங்கின என்றான்.

நான் குறுக்கிட்டேன்...அது அல்ல உண்மை வீரனே....!!! உண்மை என்ன தெரியுமா?

நான் முன்னர் சிறையில் இருந்த போது, இந்த மனிதர்தான் எனக்கு சிறைக்காவலராக இருந்தார். என்னை அடிப்படி கொடுமைப்படுத்திக் கஷ்டப்படுத்தும் போதெல் லாம்...

நான் கூக்குரலிட்டு, களைத்து, இறுதியில் கொஞ்சம் நீர் அருந்தக் கேட்பேன். இந்த மனிதர், அவ்வேளை என்னிடம் வந்து நேராக என் தலைமேல் சிறுநீர் கழித்துவிட்டுச் செல்வார்.

இப்போது அவர் என்னை இனம் கண்டு கொண்டார், நான் இப்போது தென் ஆப்பிரிக்க அதிபராக இருப்பதால் அவருக்கு பதிலடி கொடுப்பேன் என்று நடுக்கத்துடன் எதிர்பார்த்தார்... ஆனால் இது எனது பழக்கமல்ல இப்படிப்பட்ட குணம் எனதுமல்ல. பழிக்குப்பழி வாங்கும் மனநிலை ஒரு போதும் ஒரு தேசத்தையோ, தனி மனிதரையோ தட்டியெழுப் பாது. அழித்துவிடும்.

அதேநேரம் சில விஷயங்களில் மனதின் சகிப்புத்தன்மை பெரிய சாம்ராஜ்யங்களையே உருவாக்கும்...என்றார் மண்டேலா..

**– இமயவரம்பன்**

# வெற்றியை சிதம்பரம் தொகுதி மக்களுக்கு காணிக்கையாக்குகிறேன்!



சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் பானை சின்னத்தில் போட்டியிட்ட என்னை வெற்றி பெற வைத்த மக்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வெற்றியை சிதம்பரம் தொகுதி மக்களுக்கு காணிக்கையாக்குகிறேன்.

5,00,229 வாக்குகளை மக்கள் அளித்திருக் கிறார்கள். இந்த வெற்றி ஒரு மகத்தான வெற்றி! மாபெரும் வெற்றி! அங்குலம் அங்குலமாக பகை சக்தியை விரட்டியடித்து, இந்த வெற்றியை ஈட்டி இருக்கிறோம். எனவே, லட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது என்பதை விட அங்குலம் அங்குலமாக எதிர் அணியினரை விரட்டி 3219 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருக்கிறோம்.

இந்த வெற்றி அறத்தின் வெற்றி! மக்களுடைய வெற்றி. இந்த வெற்றியை எனக்கு வாரி வழங்கிய நான் உயிரினும் மேலாக நேசிக்கும் ஒடுக்கப்பட்ட சமூகத்திற்கும் சிறுபான்மை சமூகத்தினருக்கும், திமுக உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே நள்ளிரவைத் தாண்டி முடிவு அறிவிக்கப்பட்டுள்ள தொகுதி சிதம்பரம் நாடாளு மன்ற தொகுதியாகத் தான் இருக்கும். ஏனென்றால், ஒட்டுமொத்த இந்தியாவின் பார்வையே சிதம்பரம் தொகுதியின் மீது தான் இருந்தது. சனாதன சக்திகள் என்னை தோற்கடிக்க 100 கோடிக்கு மேல் செலவழித்தார்கள். கட்சிகளும் சாதிவெறி சக்திகளும் கோடி கோடியாக கொட்டி இரைத் தார்கள். எனக்கெதிரான அவதூறு பிரச்சாரத்தை கடுமையயாக மேற்கொண்டார்கள். அவற்றை யெல்லாம் தவிடுபொடியாக்கி தலித் அல்லாத சமூகத்தைச் சார்ந்தவர்களும் மிக்ககடுமையாக உழைத்து இந்த வெற்றியை ஈட்டித் தந்திருக் கிறார்கள்.

அண்ணன் தளபதி ஸ்டாலின் உள்ளிட்ட தோழமை கட்சிகளின் தலைவர்களுக்கும், பொறுப் பாளர்களுக்கும், வாக்களித்த யாவருக்கும், என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்கு கிறேன்.

இந்த வெற்றி அறத்திற்கு கிடைத்த வெற்றி மக்களுடைய வெற்றி. ஏற்கனவே நாங்கள் அறிவித் ததைப் போல சாதிவெறி சக்திகளுக்கு இடமில்லை என்பதை தமிழக மக்கள் உணர்த்தி இருக்கிறார்கள். 38 இடங்களில் திமுக கூட்டணி பெரும் வெற்றி பெற்றுள்ளது. அதே போல சட்டமன்றத் தேர்தலி லும் 13 இடங்களில் திமுக வெற்றி பெற்று இருக் கிறது. அகில இந்திய அளவில் மோடி தலைமை யிலான கூட்டணி ஆட்சியை கைப்பற்றுமளவு வெற்றி பெற்றாலும் தமிழகத்தில் மற்றும் கேரளா வில் எடுபடவில்லை. தமிழக மக்கள் வழங்கியிருக்கிற இந்தத் தீர்ப்பு தமிழ் மண், தமிழ் மண்தான். இங்கே சாதி வெறியர்களுக்கும் மத வெறியர்களுக்கும் இடமில்லை என்பதை உணர்த்தி இருக்கிறது.

ஒட்டுமொத்த இந்திய தேசமே ஒரு திசை வழியில் பயணித்தாலும் தமிழகம் எப்போதும் சமூக நீதியின் வழியில், அறத்தின் வழியில் பயணிக்கும் என்பதை இந்த தேர்தல் உறுதிப்படுத்தியிருக்கிறது.

**தொல் திருமாவளவன்.**

# எங்கள் மண்



தி இந்து நாளிதழ் கட்டுரை ஒவ்வொரு பிராமணின் வயிற்றிலும் புளியை கரைத்து ஒவ்வொரு பார்ப்பனனும் திட்டித்தீர்க்கும் பெயர்கள்...

ஏன்? எதனால்?

Richard Martin மற்றும் Tony Joseph இந்தப் பெயர் உலகில் உள்ள வரலாற்று ஆய்வாளர்களும் அறிஞர்களும் தலையில் தூக்கி வைத்துக்கொண் டாடும் பெயர்கள்.

Professor Richard Martin உலகப்புகழ்பெற்ற Oxford பல்கலைக்கழகத்தின் வரலாறு தொல்லியல் மற்றும் மரபணுவியல் (genetical) துறையின் பேராசிரி யர்கள்.

இவரின் ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் பல நாட்டவர்களின் அடிப்படை சித்தாந்தங்கங்களை தகர்த்து எறிந்திருக்கிறது...

இவருடைய குழுவினர் கடந்த நான்கு ஆண்டுகளாக...

உலகில் மனிதன் தோன்றியது எங்கே? ஆசியா வின் பூர்வ குடிகள் யார்? இந்தியாவின் மற்றும் அமெரிக்காவின் ஆதி மக்கள் யார்? என்று இந்திய துணைக்கண்டம், ஈரான், ஈராக், அமெரிக்கா, ஆப் கானிஸ்தான், பாகிஸ்தான், பர்மா, மலேசியா, நேபாளம், பங்களாதேசம் ஆகிய நாடுகளில் மக்களிடம் லட்சக்கணக்கான மரபணுக்களை ஆராய்ச்சி செய்தனர்.

இந்தியாவில் மட்டும் 16500க்கும் மேற்பட்ட மரபணுக்களை ஆராய்ச்சி செய்தனர். அந்த ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டனர்.

அந்த ஆய்வறிக்கை தான் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பார்ப்பனனின் வயிற்றிலும் புளியைக் கரைத்திருக்கிறது. அப்படி என்ன விசயம்?

இந்தியாவுக்குள் நாடோடிகளான ஆரியர்கள் மாடுகளோடு ஈராக், ஈரான் வழியாக ஆப்கானிஸ் தானில் நுழைந்து இந்தியாவில் பரவினர் என்றும், அப்போது சிந்துசமவெளி நாகரிகம் அழியும் தருவாயில் இருந்தது, அந்த நேரத்தில் தான் ஆரியர்கள் உள்ளே வந்தார்கள், அது சரியாக ரிக்வேதம் எழுதப்பட்ட காலகட்டம்.

அப்போது ஒரு இனம் இங்கே வீடுகள் கட்டி நகர நாகரீகத்துடன் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தமிழர்கள் என்றும் ஆதாரப்பூர்வமாக நிரூபித்தும் இருக்கிறார்கள்.

நமக்கு சொல்லப்பட்ட பல வரலாறுகள் பொய்யென்றாகிறது. அதாவது சிந்துசமவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம் என்று நமக்கு சொல்லப் பட்டது பொய். ஏனென்றால் அவர்கள் அப்போது தான் உள்ளேயே வருகிறார்கள்.

அப்போது அவர்கள் நாகரிகமடையாத நாடோடிகளாக இருந்தார்கள் அப்படி இருந்தவர் கள் எப்படி நகர நாகரிகத்துடன் வாழ முடியும்?

இரண்டாவது சமஸ்கிருதம் ஆதி மொழி என்று நம்மிடம் சொல்லி வந்தது வடிகட்டிய பொய்.

ஏனென்றால் அதுதான் உலகமொழிகளிலேயே இளைய மொழி என்று இப்போது நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

அதனால் அதற்கு கொடுக்கப்பட்ட செம்மொழி அந்தஸ்து தவறு

மேலும், இப்போது தான் நமக்கு புரிகிறது. மதுரை கீழடி ஆராய்ச்சியை ஏன் தடுக்கிறார்கள் என்று...

ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி ஏன் மூடி மறைக்கப்பட்டுள்ளது என்றும் இப்படி பல

கேள்விகளுக்கு இந்த ஆராய்ச்சி முடிவுகள் விடை சொல்கின்றன.

மனித இனம் ஆப்பிரிக்காவில் தோன்றுகிறது அப்போது இந்திய துணைக்கண்டம் ஆப்பிரிக்காவுடன் ஒட்டியிருந்தது என்றும்

இனிமேல் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லுவோம் இது எங்கள் மண்..வந்தேறிகள் வாலாட்டினால் குரல் உயர்த்துவோம்...தமிழன் என்பதில் மட்டற்ற பெருமை கொண்டு மார் தட்டுவோம் என்று...



## தத்து எடுப்பதற்கான வழிமுறைகள்

குழந்தை தேவைப்படுபவர்கள் யாராக இருந்தாலும் இணையதளத்தின் வழியே மட்டுமே விண்ணப்பித்து தத்து எடுக்க முடியும்.

தம்பதியின் திருமணச் சான்றிதழ் தேவை.

தம்பதியினர் இருவரின் வயதுச் சான்றிதழ் தேவை.

தம்பதியரில் யாருக்கேனும் 45 வயதுக்கு மேல் ஆகியிருக்குமானால் தத்தெடுக்கும் தகுதியில்லை.

இனி தங்களுக்கு குழந்தை பிறக்க வாய்ப்பில்லை என்பதற்கான மருத்துவச் சான்றிதழ் வழங்க வேண்டும்.

வருமானச் சான்றிதழ் தேவை.

சொத்து கண்டிப்பாக இருக்க வேண்டும்

மூன்று பேர் சிபாரிசு செய்ய வேண்டும்.

தாய், தந்தைக்கு ஏதேனும் அசம்பாவிதம் நடந்து விட்டால் அதன் பிறகு குழந்தையை பொறுப்பெடுத்து வளர்க்க நாங்கள் தயார் என, வேறு ஒரு தம்பதி வாக்குறுதி தர வேண்டும். வாக்குறுதி கொடுக்கும் தம்பதியினருக்கு சொத்து இருக்க வேண்டும்

இதில் ஏதேனும் ஒன்றைத் தர முடியாவிட்டாலும் அவர்களுக்கு குழந்தை கிடைக்க வாய்ப்பில்லை.

## செப்புப் பாத்திரங்கள்



நமது முன்னோர்கள் சமையலுக்கும், உணவுப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கும் செப்புப் பாத்திரங்களைத்தான் அதிக அளவில் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

செப்புப் பாத்திரங்களில்தான் தண்ணீரைச் சேமித்து பருகியும் வந்தார்கள். கால மாற்றமும், நாகரீக மோகமும் செப்புப் பாத்திரங்களை புழக்கத்ததில் இருந்து அப்புறப்படுத்தி விட்டன. அவற்றின் இடத்தை பிளாஸ்டிக் பொருட்கள் ஆக்கிரமித்து விட்டன.

பிளாஸ்டிக் பொருட்களில் உடல் நலனுக்குக் கேடு விளைவிக்கும் ரசாயனங்கள் சூழ்ந்திருக்கின்றன. அதுபற்றிய விழிப்புணர்வு பெருகி வருவதால் பெரும்பாலானோர் மீண்டும் செப்புப் பாத்திரங்களை பயன்படுத்தத் தொடங்கி இருக்கிறார்கள். மேலை நாடுகளில் கூட செப்புப் பாத்திரங்கள் புழக்கத்திற்கு வந்து விட்டன. குடிநீர் பாட்டில்கள், சமையல் பாத்திரங்கள், உணவுப் பொருட்களை சேமிக்கும் பாத்திரங்கள் என செப்புப் பாத்திரங்களின் விற்பனை அதிகரிக்கத் தொடங்கி உள்ளது.

செப்பு, நுண்ணிய ஊட்டச்சத்துக் கொண்டது. இது உடல் நலனுக்கு உதவுகிறது. நோய் எதிர்ப்பு அமைப்பை வலுப்படுத்துவதோடு செரிமானம் சீராக நடைபெறவும் துணை புரியும். புற்றுநோய் அபாயத்தையும் குறைக்கும். “செப்புப் பாத்திரத்தில் சேமித்து வைக்கப்படும் நீரை குடித்தால் உடல் குளிர்ச்சி அடையும், உடலில் உள்ள நச்சுக்களை நீக்கி அமில, கார சமநிலையை பராமரிக்கும். உணவுகள், சமையலுக்கு பயன்படுத்தும் பொருட்கள், காய்கறிகள் போன்றவற்றை செப்புப் பாத்திரங்களில் பாதுகாக்கலாம். மேலும் செப்புப் பாத்திரத்தில் இரவில் நீரை ஊற்றி வைத்துவிட்டு காலையில் பருகுவது நல்லது’ என்கிறார்கள் ஊட்டச்சத்தியல் நிவுணர்கள்.

அடிக்கடி காய்ச்சலுக்கு ஆளாகுபவர்கள், நோய் எதிர்ப்பு ஆற்றல் குறைந்தவர்கள் செப்பு பாத்திரங்களைப் பயன்படுத்தினால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கலாம். இது சிறந்த உயிர்க்காற்றாகவும் செயல்படும். உடலில் உள்ள நச்சுத் தன்மையை நீக்கும். உணவுப் பொருட்களில் பாக்டீரியாக்கள் பெருகுவதைத் தடுக்கும் ஆற்றலும் கொண்டது. பாக்டீரியாக்கள் மூலம் நோய் தொற்று ஏற்படாமலும் தடுக்கும்.

**தகவல் : ஜோ. எஸ்தர் ரோஸ்லின்**

# முன்னுரிமை வர்த்தக நாடுகள் பட்டியலில் இருந்து இந்தியா நீக்கம் அமெரிக்கா அதிரடி!

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இரு தரப்பு அரசியல், இராணுவ உறவு நன்றாக இருந்தாலும், வர்த்தக உறவு சொல்லிக் கொள்ளும் அளவிற்கு இல்லை என்பதே உண்மை. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிற ஹார்லி டேவிட்சன் மோட்டார் சைக்கிளுக்கு இந்தியாவில் நூறு விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. இந்தியாவில் இருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படுகிற மோட்டார் சைக்கிள்களுக்கு நாம் வரி விதிப்பதில்லை என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அதிருப்தி தெரிவித்திருந்தார்.

தங்கள் நாட்டில் இருந்து இறக்குமதி செய்கிற சாதனங்களுக்கும், பொருட்களுக்கும் இந்தியா கூடுதல் வரிவதிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது. ஆனால், இந்தியா உள்ளிட்ட வளர்ந்து வரும் நாடுகளை வர்த்தக முன்னுரிமை நாடுகள் என அமெரிக்கா பட்டியலிட்டு, ஜி.எஸ்.பி. என்று அழைக்கப்படுகிற திட்டத்தின்கீழ் சலுகைகளை வழங்கி வந்தது. இது நீண்டகால நடைமுறை.

இந்தத் திட்டத்தின்கீழ், அமெரிக்க நாடாளு மன்றம் வகுத்துள்ள தகுதி வரம்புக்கு உட்படுகிற நாடுகள், அமெரிக்க சந்தைக்கு வாகன உதிரிபாகங்கள், ஜவுளி வகைகள் உள்பட சுமார் இரண்டாயிரம் பொருட்களை வரியின்றி ஏற்றுமதி செய்ய முடியும்.

இந்த வகையில் கடந்த 2017ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து அதிகளவில் பொருட்களை வரி விதிப்பின்றி அமெரிக்கா இறக்குமதி செய்தது. அதில் இந்தியா 5.7 பில்லியன் டாலர் (சுமார் 39 900 கோடி) அளவுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்து பலன் அடைந்தது. இந்த ஆண்டில் ஜி.எஸ்.பி. திட்டத்தில் அதிகளவு பலன் பெற்றது இந்தியாதான் என தகவல்கள் கூறுகின்றன.

கடந்த ஆண்டு ஜி.எ1.பி. திட்டத்தின்படி அமெரிக்காவுக்கு இந்தியா 5.6 பில்லியன் டாலர் (39 200கோடி) மதிப்பிலான பொருட்களை வரியின்றி எற்றுமதி செய்தது. ஆனால் பல துறைகளில் இந்திய சந்தைகளில் அமெரிக்கப் பொருட்களுக்கு நியாயமான வாய்ப்பு வழங்குவோம் என நடுவண் அரசு வாக்குறுதி வழங்கத் தவறி விட்டது என்று அமெரிக்கா கருதுகிறது.

இதனால் ஜி.எஸ்.பி. திட்ட தகுதி வரம்பு குறித்து அமெரிக்காவின் டிரம்ப் நிர்வாகம், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மறு ஆய்வு செய்யத் தொடங்கியது. அதில், இந்தியாவை முன்னுரிமை வர்த்தக நாடுகள் பட்டியலில் இருந்து நீக்கி, சலுகைகளைப் பறிக்க அமெரிக்கா திட்டமிட்டது.



## "அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள், வளருகின்ற நாடுகளுக்கு ஜி.எஸ்.பி. திட்டத்தின் கீழான பலன்களைப் பறிப்பது ஒரு தலைப்பட் சமானது என கூறப்பட்டுள்ளது"

இது தொடர்பாக மார்ச் மாதம் நான்காம் நாள் இரண்டு மாத அறிக்கை கொடுத்தது. அந்த அறிக்கை யின் காலம் மே திங்கள் மூன்றாம் நாள் முடிந்து விட்டது. இதையடுத்து ஜி.எஸ்.பி. திட்டத்தின் கீழான முன்னுரிமை நாடு பட்டியலில் இருந்து இந்தியாவை நீக்கி டிரம்ப் உத்தர விட்டுள்ளார்.

அந்த உத்தரவில் அவர், இந்தியா தனது சந்தைகளில் (அமெரிக்கப் பொருட்களுக்கு) சமமான, நியாயமான வாய்ப்பு வழங்குவோம் என உறுதி அளிக்கவில்லை என்ற முடிவுக்கு நான் வந்துள்ளேன். எனவே, இந்தியாவை பலன்பெறும் வளர்ந்து வரும் நாடுகளின் பட்டியலில் இருந்து, ஜூன் 5ஆம் நாளில் இருந்து நீக்குவது பொருத்தமானதாகும் என கூறி உள்ளார்.

இந்தியாவிற்கு எதிராக இந்த முடிவை எடுக்கக் கூடாது என்று அமெரிக்க எம்.பிக்கள் பலரும் டிரம்ப் நிருவாகத்தை வலியுறுத்தியும், அது கண்டு கொள்ளப்படவில்லை என்பதையே டிரம்ப் உத்தரவு காட்டுகிறது. இந்த உத்தரவினால் இந்தியா ஆண்டுக்கு 5.6 பில்லியன் டாலர் (சுமார் 39 200கோடி) பொருட் களை வரியின்றி ஏற்றுமதி செய்யும் சலுகையை இழக்க வேண்டியது வரும்.

மத்தியில் பதவி ஏற்றுள்ள நரேந்திரமோடி தலைமை யிலான பாரதிய சனதாக் கூட்டணி அரசு, பல்வேறு பொருளாதார சவால்களை எதிர் கொண் டுள்ள நிலையில், அமெரிக்காவின் முடிவு இந்தியா வுக்கு விழுந்துள்ள அடியாகப் பார்க்கப்படு கிறது. அமெரிக்காவின் இந்த முடிவு துரதிர்ஷ் டவசமானது என இந்தியா அதிருப்தி தெரிவித் துள்ளது. இதையொட்டி மத்திய வர்த்தக அமைச்சகம் நேற்ற அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில், எந்த ஒரு உறவிலும் குறிப்பாக பொருளாதார உறவில், ஒவ்வொரு கால கட்டத்திலும் பரஸ்பரம் தீர்த்ததுக் கொள்ள வேண்டிய பிரச்சனைகள் உண்டு.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள், வளருகின்ற நாடுகளுக்கு ஜி.எஸ்.பி. திட்டத்தின் கீழான பலன்களைப் பறிப்பது ஒரு தலைப்பட் சமானது என கூறப்பட்டுள்ளது. மேலும், இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முற்போக்கான வழிகளைத் தேட வேண்டும் என அமெரிக்கா முன் வைத்த குறிப்பிடத் தக்க வேண்டுகோள்களுக்கு, இந்தியா தீர்வுகளைக் கூறியது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அது ஏற்றுக் கொள்ளப்பட வில்லை என கூறப்பட்டுள்ளது.

## மோடி அமைச்சரவையில் சமூகநீதி எங்கே? ஓய்வு பெற்ற நீதிபதி கேள்வி!



பிரதமர் மோடி இரண்டாம் முறையாக பதவியேற்ற நிலையில் அவரோடு புதிய அமைச்சர் களும் பதவியேற்றுள்ளனர். தேர்தல் பிரச்சாரங் களில் தான் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்பதால் தன் மீது பலரும் பொறாமை பிடித்து தாக்குதல் நடத்துகிறார்கள் என்று குறிப்பிட்டார் மோடி.

ஆனால் அவரது அமைச்சரவையில் பிற்படுத்தப் பட்ட வகுப்பினரை விட உயர் சாதியினரே அதிகம் இருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. மோடியின் அமைச்சரவையில் சமூகநீதி எப்படி இருக்கிறது என்று ஓய்வு பெற்ற நீதிபதி அரிபரந்தாமன் (மே 31) தனது பேஸ்புக் பக்கத்தில் ஒரு தகவலைப் பதிவிட்டுள்ளார். அதில் அமைச்சர்களின் சமுதாய ரீதியாக பட்டியலிட் டுள்ளார்.

அதன்படி பதவியேற்ற 58 அமைச்சர்களில்

உயர் சாதியினர் 32

பிற்பட்ட வகுப்பினர் 13

பட்டியல் இனத்தவர் 6

பழங்குடியினர் 4

சீக்கியர் 2

இஸ்லாமியர் 1

என தெரிவித்துள்ளார் அரிபரந்தாமன்

"ஒருவருக்கு ஒரு வாக்கு என சம வாய்ப்பு பேசும் அரசியல் தளத்தில், மக்கள் தொகையில் சுமார் 5060% உள்ள பிற்பட்ட வகுப்பினருக்கு 13 அமைச்சர்கள், சுமார் 1015% உள்ள உயர் சாதியினருக்கு 32 அமைச்சர்கள். இட ஒதுக்கீடு இருப்பதால் எம்.பி.க்கள் ஆன தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு 10 அமைச்சர்கள் (இட ஒதுக்கீடு எனில்)! சுமார் 14% உள்ள இஸ்லாமியருக்கு 1 அமைச்சர் என்பதே நிதர்சன உண்மை. அனைவருக்கும் சம வாய்ப்பு எப்போது?" என்று கேள்வியை எழுப்பியிருக்கிறார் ஓய்வு பெற்ற நீதிபதி அரிபரந்தாமன்.

நம்ம கம்பெனில பீகார், ராஜஸ்தான், ஒரிசா ஆளுக வேலை செய்றாங்க. மூனு மாசத்துக்கு வேலை பாத்துட்டு அடுத்த மூனுமாசம் ஊருக்கு போயிரு வாங்க.

ஒரு செட்டு வந்தா அதுல வயசு வித்தியாச மெல்லாம் இல்லை. பதினாறு வயசுலேருந்து அறுபது வயசு ஆளு வரைக்கும் வரும். மாசம் பத்தாயிரம் ரூபா சம்பளம் சாப்பாடு போட்றணும்.

மாடு மாதிரி பன்னெண்டு மணிநேரம் வேலை பாத்துட்டு யானை மாதிரி ரேசன் அரிசிய சோறு வடிச்சு சாப்புடறது, இல்லைனா கோதுமை ரொட்டி பருப்பு இதுதான் சாப்பாடு. சாப்பாடாவது நல்ல சோறு திங்கட்டுமேன்னு சம்பா அரிசி வாங்கிப் போட்டா ஒருத்தனுக்கும் ஒத்துக்கலை வயிறு புடுங்கிட்டு போவுது. சேட்டு, எங்களுக்கு ரேசன் அரிசியே வாங்கி குடுன்னு பேக் அடிச் சிட்டானுக.

வாரத்துக்கு மூனு நாள் அசைவம் வாங்கிக் கொடுத்துருவேன். அது கோழியோ இல்லை மீன், கறின்னு அவனுக சாய்ஸ். ஆனா கோழி கறிய விட கோழி காலை அவிச்சுத் திம்பானுக. இதனால மத்த கம்பெனி முதலாளிகளுக்கெல்லாம் நம்ம மேல காண்டு. ஏய்யா கறி வாங்கிப்போட்டு பழக்குற? அப்புறம் எங்ககிட்ட உள்ளவனுகளும் அதே மாதிரி கோப்பானுகன்னு கோவிச்சுக்குவாங்க.

என்னடா இப்படி திங்கறீங்கன்னு கேட்டா, இல்லை சேட்டு இதுவே எங்களுக்கு பிரியாணி மாதிரின்னு சிரிப்பானுக. ஆனா ஒவ்வொருத்தனும் கால் கிலோ பான்பராக் இல்லைனா ஹான்ஸை உருட்டிப் போட்டு பொளிச்சு பொளிச்சுன்னு துப்புவானுக.

பத்துபேர்ல ஏழு பேரு ரெண்டு, இல்லன்னா மூனு கல்யாணம் பன்னிருப்பானுக. சர்வ சாதாரணமா டைவர்ஸ் பண்ணுவானுக. என்னடா போனமாசம் லேட்டுன்னு கேட்டா பொண்ணு பாத்துட்டு இருக்கோம் சேட்டுன்னு கூச்சப்படு வானுக. என்னடா ஆச்சுன்னு கேட்டா அது சரியில்லைன்னு சர்வ சாதாரணமா மொதப் பொண்டாட்டிய கழட்டி விட்ருப்பானுக.

தமிழ்நாடு சூப்பர்னு சொல்வானுக. அவனுக ஊர்ல போலீசுக்கெல்லாம் வேலையே இல்லையாம். ஒவ்வொரு கிராமத்துலயும் பஞ்சாயத்து இருக்கு மாம். அவனுக சொல்றதுதான் தீர்ப்பு. போலீசு உள்ள வரமுடியாது. வந்தா இவனுக அவனுகளோட சண்டை போட்டு சுட்டுக்கிட்டு சாகுவானுகளாம். எல்லார் வீட்லயும் துப்பாக்கி இருக்கும். என்னதான்டா வாழ்றீங்கன்னு கேட்டா, விவசாயம் இல்லை, எல்லாம் குட்டி குட்டி ஜமீன்தார் கண்ட் ரோல்ல இருக்கு. கூலி வேலைக்குப் போனாலும் சோறுதான் மிச்சம்.

அதாவது 1940 ல இருந்த தமிழ்நாட்டோட நிலைமை. அதாவது நம்ம கல்யாணம் பண்ணி பேரன் பேத்தி பாத்துட்டோம். இவனுக இன்னும் வயசுக்கே வரல. உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் பகுத்தறிவு இல்லா வட நாட்டுக் கூமுட்டை மக்கள்தான் நமக்கான ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்ற நிலை இருக்கும் வரை, இந்தியா கார்ப ரேட்டுகளின் கையில் சிக்கி நாசமாய்த்தான் போகும்.

# வடநாட்டான் வயசுக்கே வரல?!

**தோழர் சின்னையா காசி**



# சுதந்திரம் கூட எனக்கில்லையடா?

எரிகின்ற ஈழத்தில் – குளிர்
காய்கின்ற தமிழா
எழுந்திடடா கலைந்து
இன்னுமா உறக்கம்?

விரைகின்ற கதிரோன் – உலகில்
தருகின்ற ஒளியோ!
எரிகின்ற ஈழத்தீக்கு
இணையாக வில்லை!
சரிகின்ற மலையே – உனைத்
தாங்கிடும் புவியோ!
எரிகின்ற நெருப்பை
ஏன் அணைக்க வில்லை?

புரிகின்ற மனமோ– நம்மில்
பலருக்கும் இல்லை
புரிந்திட்ட சிலரோ
துணிந்திட்ட தில்லை
எரிகின்ற நெருப்பு – இன்னும்
அணைய வில்லை
எரித்தவர் தாமும்
அணைத்திட வில்லை!

அன்பு மலர்களின் – தூய
கற்பினை அழித்தார்!
அநீதி என்றோம்
கொலைகளும் செய்தார்!
என்னடா நீதி இது – என
எழுந்து நின்றோம்!

எங்கும் அடக்கியே
அழித்திட நினைத்தார்!

வானத்தை நோக்கிப்
பார்க்கின்றோம்! – ஏறி
விமானங்கள் குண்டைப்
பொழிகின்றன!
பூமியை நோக்கி
நடக்கின்றோம்! – கூரிய
புல்லட் நெஞ்சினில்
பாய்கின்றது!

குங்குமம் இட்ட
நெற்றிகளோ! – செங்
குருதிகள் கொட்டி
அழிகின்றன!
அங்கே ஒலிக்கும்
ஓலங்களோ? – உல
கெங்கும் தீர்க்கா
அவலங்களா?

சிலம்புகள் ஒலித்த
கால்களில் – தீப்
பிழம்புகள் பற்றி
எரிகின்றதே!
புலம்பும் ஒலிதனை
செவியேற்று – தமிழா
கிளம்புவாய் நீயும்
களம் புகவே

சிங்கத் தமிழனைப்
பெற்றவளோ – மனம்
பொங்கிப் பொழிகிறாள்!
கண்ணீரை!
பொங்கி வழியும்
கண்ணீரோ – உலகு
எங்கும் கடலாய்
மாறினதோ?

என்னையும் ஈன்றவள்
அவள் தானே! – நம்
ஈழத் தவர்தாய்!
தமிழ்தானே
உன்னையும் என்னையும்
நினைக்கின்றாள்! – தமிழ்
இனமதைக் காக்க
அழைக்கின்றாள்

கொட்டிய குருதியில்
குளிக்கின்றாள்! – தமிழ்
குழந்தையை ஈன்றவள்
துடிக்கின்றாள்!

சிட்டுக் குருவியும்
இவ்வுலகில்
சுதந்திரப் பறவையாய்த்
திரியுதடா! – உன்னைத்
தொட்டிலில் இட்டு
தாலாட்டும்
சுதந்திரம் கூட
எனக்கில்லையடா?

**கவிஞர். இராமன்**
சென்னை.



# தமிழிசை நிர்மலா சீதாராமன்

## ஒரு ஒப்பீடு

பிறந்த ஆண்டு:
நிர்மலா : 1956
தமிழிசை 1961
கல்வித்தகுதி :

நிர்மலா MA (eco) Phd (textile trade)
தமிழிசை M.B.B.S.,Sonology & FET in canda
(கைனகாலஜிஸ்ட்)

பிஜேபி கட்சி இணைவு :
தமிழிசை 1999
நிர்மலா : 2006

பதவி உயர்வு கிராப் :
நிர்மலா :
கட்சி இணைவு 2006
செய்தி தொடர்பாளர் 2008
(நிதி கார்ப்பரேட் விவகாரம்)
காபினெட் அமைச்சர் 2016
பாதுகாப்புத்துறை அமைச்சர் 2017
(வியர்வை சிந்தாம வெல்லம் திங்கறது இதுதானோ?)

**தமிழிசை :**

கட்சி இணைவு 1999

தென்சென்னை மருத்துவர் அணி செயலர் 1999

மாநில மருத்துவர் அணி செயலர் 2001

தென்னிந்திய மருத்துவர் அணி துணைசெயலர் 2005

மாநில பொதுச் செயலர் 2007

மாநில துணைத் தலைவர் 2010

பிஜேபி தேசியச் செயலர் 2013

தமிழக பாஜக தலைவர் 2014

பாரத் பெட்ரோலிய டைரக்டர் 2017

தேர்தல் பங்கெடுப்பு:

நிர்மலா தேர்தலா? மூச். எப்பவும் ராஜ்யசபா எம்.பி.தான் வெய்யில்ல, அலைஞ்சி திரிஞ்சி எம்பி ஆகுறது சூத்திரச்சி பாணி!?

ஆந்திரா ராஜ்யசபா எம்பி 2014

கர்நாடக ராஜ்யசபா எம்பி 2016

**தமிழிசை :**

ராதாபுரம் சட்டமன்ற தொகுதி (தோல்வி) 2006

வேளச்சேரி சட்டமன்ற தொகுதி (தோல்வி) 2011

வடசென்னை மக்களவை தொகுதி (தோல்வி) 2009

தூத்துக்குடி மக்களவை தொகுதி (தோல்வி) 2019

(பாவம்...இந்தக்கா எத்தன தடவ தேர்தல்ல நின்னு தோத்திருக்கு..

ஒரு ராஜ்யசபா எம்பி ஆக்க மனசில்லயே அமித்சாவுக்கு!

பாப்பாத்தியா இருந்தா ஆக்கியிருப்பானுவ)

பிறகுறிப்புகள்:

**நிர்மலா:**

நிர்மலா கட்சியில் சேர்ந்தது 2006ல் ஆனால் 2007ல் நிர்மலாவின் கணவர், நடிகர் சிரஞ்சீவி ஆரம்பித்த பிரஜாராஜ்யம் கட்சியில் இணைகிறார். சிரஞ்சீவி காங் உடன் கட்சியை இணைத்ததும் மீண்டும் பிஜேபிக்கு வருகிறார்!

**தமிழிசை:**

தமிழிசையின் கணவர் சௌந்தர்ராஜன் எப்போதும் பிஜேபிதான் இருந்தும் என்ன புண்ணியம்?

எம்.ஜி.ஆர், மருத்துவ பல்கலைக்கழக துணை வேந்தர் பதவிக்கு விண்ணப்பித்தார் சௌந்தர் ராஜன் ஆனால் அந்த பதவி “சுதா சேஷைய்யன்” என்ற பாப்பாத்திக்குத்தான் போய்ச் சேர்ந்தது!


தகுதி திறமை படிப்பு உழைப்பு என அனைத்துர் தகுதிகளும் தமிழிசைக்கு இருந்தாலும்... தமிழிசையால் மத்திய அரசில் ஒரு இணை அமைச்சர் பதவி கூட பெற முடியவில்லை!

ஆனால், எந்த தகுதியும் இல்லாமல் ஸ்மிதி இரானி எல்லாம் கூட மத்திய அமைச்சர் ஆக முடிகிறது!

கட்சியில் சேர்ந்த குறைந்த காலத்தில் இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் என்ற உயர் நிலைக்கு நிர்மலாவால் போகமுடிகிறது என்றால், அதுவும் எந்த தேர்தலிலும் பங்கெடுக்காமல் மக்களை சந்திக்காமல், ராஜ்யசபா எம்.பி எனும் பின்வாசல் வழியாக வந்து காபினெட் அமைச்சராக ஆக முடிகிறதென்றால் பார்ப்பனியத்தின் பலத்தை புரிந்துகொள்ள வேண்டும்!

வியர்வை சிந்தாமல், வெய்யிலில் அலையாமல், வசைசொற்களை ஏற்காமல், வாத பிரதிவாதங்களுக்கு பதில் சொல்லாமல், மக்களின் சாபங்களை பெறாமல், தேர்தல் தோல்விகளை அடையாமல், தெருப்புழுதி மேனியில் படாமல், முதல்பந்தியில் அமர்ந்து மூக்குபிடிக்க பாயசம் குடிப்பதுதான் பார்ப்பனீயம்!

கட்சிசெய்யும் தவறுகளுக்கெல்லாம் முட்டுக் கொடுத்து, பாசிச பாஜக ஒழிக என்ற கோஷங்களுக்கெல்லாம் சண்டையிட்டு வக்காலத்து வாங்கி, தாமரை மலர்ந்தே தீரும் என்று தொண்டை தண்ணீர் வற்ற கத்தி, கேலிச்சித்திரங்கள், மீம்சுகள் உருவத்தை கேலிப்பொருளாக்கி பேசுபவர்களை சமாளித்து, கட்சி வளர்ப்பது தமிழிசை மாதிரியான ஏமாளிகள்தான்!



இந்நாட்டில் “நோகாமல் நுங்கு தின்பது” பார்ப்பனக் கூட்டம்தான்.

நமக்கு புரிந்துவிட்டது! 97 விழுக்காடு மக்களுக்கும் எப்போது புரியுமோ?

பகிரியிலிருந்து...

**சைதை மணிமாறன்**

# மஞ்சள் காமாலையும் மருத்துவமும்...


**சோ. தில்லைவாணன்**

அரசு சித்த மருத்துவர், பேரணாம்பட்டு.

கோடை வெயில் நம்மை சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது. வெயிலின் தாக்கத்தால் காமாலை, அம்மைநோய், கண்நோய்கள், சிறுநீரகப்பாதை தொற்று நோய்கள், தோல் நோய்கள், வெப்ப அதிர்ச்சி தாக்குதல் முதலியன பொதுவாக உருவாகும். கோடை காலத்தில் காமாலை நோய் உடலில் ரத்தத்தில் பித்த நிறமி அதிகம் கலப்பதால் ஏற்படும். மதுப்பழக்கம் அதிகம் உள்ளவர்களுக்கு பெரும்பாலும் ஏற்படும். ஆகையால், மதுவினை தவிர்ப்பது நல்லது. கல்லீரலை குளிர்ச்சியாக்க கரிசாலைக் கீரையினை கோடைக்காலம் முழுவதும் எடுத்துக் கொள்ளலாம். கீழாநெல்லி முழு செடியினையும் அரைத்து காலை வெறும் வயிற்றில் மோருடன் எடுத்துக் கொள்ளலாம். நெருஞ்சில்முள், கல்லீரல், சிறுநீரகம் ஆகிய இரண்டு உறுப்பிற்கும் நல்லது. ஆகையால் அதனை வெயில் தாக்கம் அதிகம் உள்ள காலங்களில் நீரில் கொதிக்க வைத்து எடுத்துக் கொள்ளலாம்.

நம் உடலின், கண்கள் பித்தத்தின் உறுப்புகள், பித்த காலமாகிய கோடைக்காலத்தில் கண்கள் பாதிக்கப்படுவது எளிது. கண்களை குளிர்ச்சியாக்க உள்ளங்கால்களில் இரவில் நல்ல எண்ணெய் தடவி விடலாம். கண் வலிக்கு சீரகத்தை பாலில் பொட்டலம் கட்டி வேக வைத்து கண்ணுக்கு ஒற்றடம் இடலாம். ரோஜாப்பூ இதழ்களை நீரில் ஊறவைத்து அந்த நீரில் கண்களை கழுவிவர கண்ணிற்கு குளிர்ச்சி தரும். பித்தத்தைக் குறைக்கும் எலுமிச்சை, மாதுளை, நார்த்தைப் பழங்களை எடுத்துக் கொள்ளலாம்.

அதிக வெயிலைத் தொடர்ந்து நடுவே, மழை பெய்து குளிர்ச்சியாக்கும்போது தட்டம்மை, சின்னம்மை நோய்கள் பரவும். அம்மை நோய் வராமல் தடுக்க தாழம்பூ மலர்ப்பாகினை எடுத்துக் கொள்ளலாம். அம்மை நோய் வந்தவர்களைத் தனிமைப்படுத்துதல் மற்றவர்களுக்குப் பரவாமல்





தடுக்கும். அம்மை வந்தவர்களுக்கு வேப்பிலையுடன், அதிமதுரம் சேர்த்து வெறும் வயிற்றில் மோருடன் தரலாம். வேப்பிலை பித்தத்தையும் குறைக்கும். வைரஸ் கிருமியின் வீரியத்தையும் குறைக்கும்.

சிறுநீரகப்பாதை நோய்களான கல்லடைப்பு, அதில் தொற்று கிருமிகள், சிறுநீர் எரிச்சல் முதலிய குறிகுணங்கள் வெயில் காலத்தில் அதிகம். நாம் குடிக்கும் நீரானது தோலில் இழக்கப்படுவதால், சிறுநீரகத்தில் வறட்சி ஏற்பட்டு மேற்கூரிய குறிகுணங்கள் ஏற்படும். அவரவர் உடல் எடைக்கு ஏற்றார்போல நீரினைப் பருக வேண்டும். நீர் எரிச்சல் உள்ளவர்கள் வெள்ளரிவிதை, முலாம்பழ விதை, தர்பூசணி விதை இவற்றைச் சேர்த்து நீரிலிட்டுக் காய்ச்சி அருந்தலாம். முள்ளங்கியோடு அதன் கீரையும் உணவில் சேர்க்கலாம். கல்லடைப்புக்கு நெருஞ்சில் முள், சிறுபீளை இவற்றை குடிநீரிலிட்டுப் பருகலாம் சிறுநீரகத் தொற்றுக்கு மூக்கிரட்டைக் கீரையை நீரிலிட்டுக் காய்ச்சி வெள்ளரி விதை பொடி சேர்ததுக் குடிக்கலாம்.

தோல் ஒவ்வாமை வெயில் காலங்களில் பொதுவாக ஏற்படும் ஒன்று. வெயிலில் அலைந்து பணி செய்பவர்கள் முழு சட்டை அணிதல் நல்லது. லேசான காற்றோட்டம் மிக்க ஆடைகளை குழந்தைகளுக்கு உடுத்துவது நல்லது. சூரியனின் புற ஊதா கதிர்வீச்சு அதிகம் இருக்கும் என்பதால் வியர்க்குரு ஒவ்வாமை அதிகம் ஏற்படும் அபாயம் உள்ளது. ஏற்கனவே தோல் நோய் உள்ளவர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவர். அவர்கள் கோடை காலத்தில் பருத்தி உடைகளை அணிவது சிறந்தது. தோல் வறட்சி வராமல் தடுக்க வெட்டிவேர் சேர்ந்த குளியல் பொடியினை வாங்கி பயன்படுத்தலாம். நீண்ட நேரம் குளியலைத் தவிர்த்து, குளித்து முடித்த பின் ஈரப்பதத்தை தக்க வைக்க களிம்புகளை பயன்படுத்தலாம். தேங்காய் எண்ணெய், பாதாம் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் இவற்றில் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

உடல் வெப்பநிலை 105 டிகிரியை தாண்டும் போது வெப்ப அதிர்ச்சித் தாக்குதல் ஏற்படும். இதனால் உடல் சோம்பல், தலை சுற்றல், மயக்கம், படபடப்பு, மூச்சு சுவாசம் அதிகரித்தல், மனக் குழப்பம், உடல் உள் உறுப்புகள் சேதாரம், சுய நினைவை இழத்தல் போன்ற தீவிர குறிகுணங்கள் உண்டாகும். இதனைத் தடுக்க நீர் அதிகம் குடித்தல், இருமுறைகுளித்தல், வியர்வை வெளிப்படும் படியான தளர்வான ஆடைகளை அணிதல் அவசியம்.

குளிர்பானங்களில் நிறமூட்டவும் சுவைகளுக் காகவும் சேர்க்கப்படும் பல வேதிப்பொருட்கள் புற்று நோய் தூண்டும் காரணிகளாக உள்ளன. அதில் உள்ள இனிப்புச் சத்தும், அமிலச் சத்தும், கார்பன் டை ஆக்சைடும் மெல்ல மெல்ல நம் பல், குடல் பகுதியினை அரிக்கும் தன்மை உடையது. இதனால் பின் நாட்களில் வயிற்றுப் புண், நீரிழிவு, உடல் பருமன், எலும்பு தேய்மானம், புற்றுநோய் ஏற்பட வாய்ப்பு அதிகம். சில குளிர்பானங்களில் கிருமிகள் சேராமல் பாதுகாக்க சேர்க்கப்படும் உப்புச் சத்துகளால் புற்றுநோயினை உண்டாக்கும் அபாய நிலை உள்ளது. மேலும் குளிர்ப்பதனப் பெட்டிகளில் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தி வைத்து பயன்படுத்துவது உடலுக்குக் கேடு தரும். ஆகையால் இயற்கையான முறைகளில் பழங்களையும், குளிர்ச்சி தரும் காய்களையும், உணவு வகைகளையும், எடுத்துக் கொண்டு இயற்கையான முறையில் வாழ்ந்தால் கோடை வெயிலின் தாக்கம் மட்டுமல்லாமல், பல்வேறு நோய் நிலைகளின் தாக்கமும் இல்லாமல் நெடுநாள் வாழலாம் என்பதில் ஐயமில்லை.


**விளம்பர கட்டண விபரம்**

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/-
**(முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/-
**(முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ.** 10,000/-
**(முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-

# கூடங்குளம் அணு உலைக் கழிவால் நிகழும் அழிவு



கூடங்குளத்தில் உற்பத்தியாகும் அணுக்கழிவு களைகூடங்குளம் வளாகத்திலேயே வைக்க முயலும் மத்திய அரசின் முயற்சிக்கு கண்டனம் பூவுலகின் நண்பர்கள் அறிக்கை.

கூடங்குளம் அணு உலை தொடர்பாக பூவுலகின் நண்பர்கள் அமைப்பு உச்சநீதிமன்றத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு வழக்குத் தொடுத்தது. இந்த வழக்கில் 2013ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றம் 15 நிபந்தனைகளைக்கூறி உலை செயல்பட அனுமதித்தது.

அதில் முக்கியமான நிபந்தனையானது அணுக் கழிவுகளை உலைக்கு வெளியே வைப்பதற்கான வசதியை 5 ஆண்டுகளில் உருவாக்க வேண்டும் என்பதாகும். 5 ஆண்டுகால அவகாசம் 2018 மார்ச் மாதமே முடிந்த நிலையில் மேலும் 5 ஆண்டுகள் கால அவகாசம் வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தில் கடந்த 2018 பிப்ரவரி மாதம் தேசிய அணுமின் கழகம் மனு ஒன்றை தாக்கல் செய்தது.

இந்த AFR வடிவமைப்பத்திலுள்ள தொழில் நுட்பம் முழுவதுமாக கைவராத நிலையில் அதை அமைப்பதில் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகிறோம் என்றும் அதனால் தான் மேலும் 5 ஆண்டுகள் அவகாசம் வேண்டும் எனக் கூறியிருந் தது. மேலும், அதே மனுவில், இதைப் போன்ற மென் நீர் உலைகள் இந்தியாவில் முதல் முறையாக கூடங்குளத்தில் உள்ளதால் இது மிகவும் சவாலான பணியாக இருக்கும் என்றும் தெரிவித்திருந்தது.

ஆனால், அணுக்கழிவுகளை உலைகளுக் குள்ளேயே சேகரித்துவைப்பதால் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. ஆகவே AFR கட்டி முடிக்கப் படும் வரை கூடங்குளத்தில் உள்ள 2 உலை களில் இருந்து மேலும் கழிவுகள் உண்டாகாமல் இருக்கவேண்டும் என்பதால் இந்திய அணுசக்தி கழகத்தின் கோரிக்கையை நிராகரித்துவிட்டு AFR மற்றும் வசதிகளை ஏற்படுத்தி முடிக்கும் வரை இரண்டு உலைகளிலும் மின்னுற்பத்தியை நிறுத்தி வைக்க வேண்டும் என பூவுலகின் நண்பர்கள் சார்பில் மனுத்தாக்கல் செய்திருந்தோம். அந்த வழக்கை கடந்த ஆண்டு விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை அமர்வு, கூடங்குளம் அணு உலையில் அணுக்கழிவுகளை பாதுகாப்பாக கையாள என்ன என்ன நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என 2018 ஜூலை முதல்வாரத்திற்குள் அணு உலை ஒழுங்குமுறை ஆணையம் உச்சநீதி மன்றத்தில் ஆய்வறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனக் கூறியது.

அதன்படி தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் கூடங்குளம் அணுவுலையில் உள்ள Fuel Pool அதன் முழுகொள்ளவை இன்னும் எட்டவில்லை என்றும் மேலும் 5 ஆண்டுகள் கால அவகாசம் வழங்கினால் AFR வசதியைக்கட்டி முடித்து விடு வோம் எனவும் கூறியிருந்தது.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் 2022ற்குள் AFR கட்டிமுடிக்க வேண்டும் என்று தீர்ப் பளித்தனர்.

இதன் தொடர்ச்சியாக கூடங்குளம் வளாகத் திற்குள்ளாகவே Away From Reactor வசதியைக் கட்டுவதற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் வருகிற ஜூலை மாதம் 10ஆம் தேதி நெல்லை மாவட்டம் இராதாபுரத்தில் நடைபெறும் என மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

அணுக்கழிவுகளை நிரந்தரமாக சேமித்துவைக்க உலக அளவில் பயன்படுத்தப்பட்டுவரும் "ஆழ் நிலைகருவூலம்" " (Deep Geological Repository) அமைப்பதற்கான இடமும், தொழில் நுட்பமும் இன்று வரை இந்தியாவிடம் இல்லாத நிலையில் AFR போன்ற தற்காலிக வசதியை நம்பி தொடர்ந்து கூடங் குளத்தில் கழிவுகளை உற்பத்தி செய்வதுமிகப் பெரிய அச்சுறுத்தலுக்கும் நம்மை ஆழ்த்தும் விஷயமாகும்.

கூடங்குளத்தில் நடக்கும் இந்த விவகாரங்கள் குறித்து மாநில அரசு துளியும் கண்டு கொள்ளாமல் இருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது.

உலகம் முழுவதும் அணுக்கழிவுகளை பாது காப்பாக வைக்கும் தொழில்நுட்பத்தை எந்த நாடு களும் கண்டு பிடிக்க முடியவில்லை. அதுபெரிய சவாலாக உள்ளது. இந்நிலையில் சோதனை எலி களாக தமிழ் மக்களை மாற்றும் இந்த விபரீதமான விசயத்திற்கு, கூடங்குளத்தில் AFR அமைக்க தமிழக அரசு அனுமதி அளிக்கக்கூடாது. நிரந்தர கழிவு மையம் அமைப்பது குறித்த தெளிவான திட்டத்தை மத்திய அரசு உருவாக்கும்வரை கூடங்குளத்தில் இரண்டு உலைகளிலும் மின்னுற்பத்தியை நிறுத்தவேண்டும், மேற்கொண்டு நான்கு உலைகள் கட்டுவதையும் கைவிட வேண்டும் என்று பூவுலகின் நண்பர்கள் அமைப்பு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

ஜப்பான் நாட்டில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட புகுஷிமா அணுஉலை விபத்தினால் ஏற் பட்ட பாதிப்புகளைவிட அணுஉலைகழிவு களையா ளும் தொழில்நுட்பம் இல்லை என்று கடந்த ஆண்டே வெளிப்படையாக மத்திய அரசு ஒத்துக் கொண்ட நிலையில் மத்திய அரசும் தமிழக அரசும் இனியும் காலம் தாழ்த்தாமல், பாதுகாப்பற்ற, பேராபத்தை விளைவிக்கும் இந்த முயற்சியை கைவிட வைப்பதற்கு தமிழகத்தில் உள்ள அனைத்து அமைப்புகளும், கட்சிகளும், புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பபினர் களும் வலியுறுத்தவேண்டும் என்று கேட்டுக் கெள்கிறோம்.

# அவசியம் கடைபிடிக்க வேண்டிய ஆரோக்கிய குறிப்புகள்...

Dr. Gouse (Raja), MD (Tcm, Acu)., Singapore.

ஆரோக்கியம் என்பது நோய் வந்தபின் குணப்படுத்திக் கொள்வதல்ல. நோய்கள் வராமல் உடலை தற்காத்து கொள்வதே ஆரோக்கியமாகும். அப்படிப்பட்ட ஆரோக்கியத்தைப் பெறுவது எப்படி?

1. பசிக்கும்போது மட்டும் சாப்பிடுங்கள் தாகமெடுத்தால் தண்ணீர் குடியுங்கள். பசி வேறு, தாகம் வேறு என்பதை புரிந்து கொள்ளுங்கள். உணவோடு தண்ணீரை உட்கொண்டால் வயிற்றில் உள்ள உணவுத் துகள்கள் தண்ணீருடன் கலந்து மிதக்க ஆரம்பிக்கும். அதனால் செரிமானம் தாமதமாகும். உணவை சாப்பிட்டு விட்டு சுமார் 20 நிமிடங்கள் கழித்து தண்ணீர் அருந்துவது நல்லது.

2. பசிக்கும் போது பயமில்லாமல் உங்களுக்குப் பிடித்த எந்த உணவையும் போதுமான அளவு சாப்பிடுங்கள். பசி இருக்கும் பொழுது எந்த உணவு சாப்பிட்டாலும் அது இலகுவாக ஜீரணமாகி விடும். உணவை நிதானமாக மென்று சாப்பிடுங்கள் டிவி பார்த்துக்கொண்டும் பேசிக்கொண்டும் சாப்பிடாதீர்கள்.

3. தரையில் அமர்ந்து சாப்பிடுங்கள். உங்கள் கை விரல்களால் சாப்பிடுங்கள். ஆரோக்கிய ரீதியாக விரல்களுக்கும் ஜீரணத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. உதாரணமாக ஒரு உணவை வெறுங்கையால் தொட்டால் அது விரைவில் கெட்டுப்போகும். அதுபோல் கையால் சாப்பிட்டால் அந்த உணவு விரைவாக ஜீரணமாகிவிடும் கை இல்லாதவர்களுக்குத் தான் ஸ்பூன் தேவை.

4. விரும்பிய சைவ – அசைவ உணவுகளை உண்ணுங்கள். மசாலா குறைத்து, உப்பு, புளி, இனிப்பை மிதமாக சாப்பிடுங்கள்.

5. ஒரே வகை உணவையும், ஒரே சுவையுள்ள உணவையும் தொடர்ந்து சாப்பிடாதீர்கள். அவ்வப்போது அறுசுவைகளையும் கலந்து சாப்பிடுங்கள்.

6. முடிந்த அளவு இயற்கையாக விளைந்த உணவுகள் மற்றும் பழங்களைச் சாப்பிடுங்கள்.

7. பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் குளிர்சாதனப் பெட்டியில் வைத்த உணவுகளையும் தவிர்த்து விடுங்கள். விளம்பரம் செய்யப்படுவதை ஒருபோதும் வாங்காதீர்கள்.

8. கடைகளில் விற்கப்படும் ஜூஸ்களையும், மற்றும் அனைத்து குளிர் பானங்களையும் அவசியம் தவிர்த்து விடுங்கள்.

9. பக்கவிளைவுகள் இல்லாத எந்த மாத்திரையும் கிடையாது. தலைவலி, காய்ச்சல் என்று எதற்கெடுத்தாலும் உடனே மாத்திரையை சாப்பிடாதீர்கள் சற்று பொறுத்திருங்கள். ஓய்வெடுங்கள், சரியாகவில்லை என்றால் பிறகு தகுந்த மருத்துவரை பாருங்கள்.

10. சளி, ஜுரம், ஜலதோஷம் இருக்கும் போது டீ, காஃபி, பால் போன்றவற்றை சாப்பிடாமல் இருந்தால் நோய்கள் விரைவாக குணமாகும்.

(இது ஒருவருக்கான மடல் மட்டுமல்ல இந்தித் திணிப்பை நியாயப்படுத்துகிறவர்கள் ஒவ்வொரு வருக்குமான, இந்தித் திணிப்பை எதிர்ப்பவர்களும் படிக்க வேண்டிய பதிவு).

அன்புள்ள, திரு ரங்கராஜ் (பாண்டே) அவர்களுக்கு,

வணக்கம்,

“ஹிந்தி திணிப்பு உண்மையா?“ என்னும் தலைப்பில் சாணக்கியாவில் நீங்கள் ஆற்றியுள்ள உரையைக் காணொலி வடிவில் முழுமையாகப் பார்த்தேன்.

பல ஆண்டுகளுக்குப் பின், “புரட்சி வெடிக்கும், கிளர்ச்சி வெடிக்கும்“ என்னும் குரல்கள் கேட்பதாக, ஒரு மெலிதான ஏளனத்துடன் தொடங்கும் அந்த உரை குறித்துச் சில செய்திகளைப் பகிர்ந்து கொள்ளவே இந்தத் திறந்த மடலை எழுதுகின்றேன்.

புதிய கல்விக் கொள்கை குறித்து ஆராய, டி.எஸ்.ஆர்.சுப்பிரமணியம் தலைமையில் குழு அமைக்கப்பட்டதும், அதன் பிறகு 2017, ஜூன் மாதம் இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரி ரங்கன் தலைமையில் 9 பேர் கொண்ட குழு அமைக்கப் பட்டதுமான செய்திகளையும், அவர்கள் இப்போது 484 பக்கங்களில் பரிந்துரை வழங்கியுள் ளனர் என்னும் செய்திகளையும் எல்லாம் கூறி விட்டு, அந்த அறிக்கையை நுனிப்புல் மேயாமல் ஆழ்ந்து படிக்க வேண்டும் என்று அறிவுரையும் கூறியுள்ளீர்கள்.

உங்கள் அறிவுரை சரிதான். நுனிப்புல் மேய்வது அறிவுக்கு ஏற்றதன்று. ஆனால், அந்த அறிக்கையைக் கூட, மத்திய அரசு, எல்லோரும் எளிதில் புரிந்துக் கொள்ளத்தக்க வகையில், அவரவர் தாய்மொழியில் கொடுக்கவில்லை, குறைந்தது, மும்மொழித்திட்டம் பற்றிப் பேசும் அந்த அறிக்கையை மூன்று மொழிகளில் கூடத் தரவில்லை.

எந்த ஆங்கில மொழியை வேண்டாம் என்கின்றனரோ, அதே ஆங்கிலத்தில் மட்டும்தான் தந்துள்ளனர்.

அதனை எத்தனை இந்தியப் பாமர மக்களால் படித்துப் புரிந்துகொள்ள முடியும்?

புரிந்துகொண்டு, ஒரே மாதத்தில் தங்கள் கருத்தை அரசிடம் பதிவு செய்ய முடியும்?

தலைமுறை தலைமுறையாக ஆங்கிலம் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள உங்களைப் போன்றவர்களுக்குத்தானே அதுவெல்லாம் எளிதாக இருக்கும்.

# சுப.வீரபாண்டியன் திறந்த மடல்



நாங்கள் பாமரர்கள், நுனிப்புல்தான் மேய வேண்டியிருக்கும். பிறகு உங்களைப் போன்ற சாணக்கியர் சொல்வதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

போகட்டும், பிறகு மும்மொழிக் கொள்கை என்றால் என்ன என்று விளக்கிவிட்டு,

1968 முதல் தமிழ்நாட்டில் தமிழ் ஆங்கிலம், என்னும் இருமொழிக்கொள்கை நடைமுறையில் இருந்து வருவதைச் சுட்டியுள்ளீர்கள்.

இதன் பிறகுதான் உங்கள் கச்சேரி தொடங்கு கிறது.

இருமொழிக்கொள்கையை ஏற்றுக்கொண்ட இந்த ஒரே காரணத்தினால் இந்தியாவின் எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்ட நவோதயா பள்ளிகளைத் தமிழகம் அனுமதிக்கவில்லை என்பதை வருத்தத்துடன் பதிவு செய்கின்றீர்கள்.

இடையில் கல்வி அமைச்சராக இருந்த மாபாய் பாண்டியராஜன் அதனைக் கொண்டுவர முயன்றதாகவும் அதுவும் பயனின்றிப் போய்விட்டதெனவும் கூறுகின்றீர்கள்.

நவோதயா பள்ளிகளைத் தமிழகம் மறுத்தது.

அந்த ஒரே ஒரு காரணத்திற்காக மட்டுமில்லை, நவோதயா பள்ளிகள் திட்டம் 1985, ஆகஸ்டில் முன்மொழியப்பட்டு 1986ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.

அன்று முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர்.அதனை இங்கு மறுத்துவிட்டார்.

பிறகு 1992 முதல் ஜெயலலிதா அதனை நடைமுறைப்படுத்த முயன்றார்.

பரதநாட்டிய வகுப்பையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்பதே அவரின் கோரிக்கையாக இருந்தது.

ஆனால் தமிழகத்தில் எழுந்த எதிர்ப்பு காரணமாக அவரால் அதனை இங்கு கொண்டுவர இயலவில்லை.

நவோதயா என்பது உண்டு, உறையும் பள்ளி என்பதும், அதற்கான செலவை மத்திய அரசே ஏற்கும் என்பதும், மாணவர்களுக்கு எல்லாம் இலவசம் என்பதும் உண்மைதான்.

ஆனால், அந்தப் பள்ளி ஒரு மாவட்டத்திற்கு ஒன்று மட்டுமே திறக்கப்படும்.

அந்தப் பள்ளியில் ஒரு வகுப்பில் இரண்டு பிரிவுகளில் 40 முதல் 80 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

ஒரு மாவட்டத்தில் பல லட்சம் பிள்ளைகள் இருக்கும்போது, 80 மாணவர்களுக்கு மட்டும், இந்தியைக் கட்டாயப் பாடமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன், எல்லா உதவிகளும் அளிக்கப்படும்.

இது என்ன நியாயம்?

தமிழ்நாட்டில் ஏற்கனவே ஆதி திராவிட நலப் பள்ளிகள்,

பழங்குடியினருக்கான பள்ளிகள் உள்ளன.

கள்ளர் சமூக மக்களுக்கான மேம்பாட்டுப் பள்ளிகள் கூட உள்ளன.

மத்திய அரசு, நவோதயா பள்ளிகளுக்கு வழங்க முன்வரும் 40 கோடி ரூபாய் பணத்தை எல்லா மாணவர்களுக்கும் பகிர்ந்து தரக்கூடாதா என்பதே நம் கேள்வியாக இருந்தது.

**இந்தி பேசும் மாநிலங்களிலும், மும்மொழிக் கொள்கை உள்ளதே என்கிறீர்கள். அங்கே தாய்மொழி, ஆங்கிலம், ஏதேனும் ஓர் இந்திய மொழி என்றும் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தி பேசாத மாநிலங்களில், தாய்மொழி, ஆங்கிலம், இந்தி என்று மூன்று மொழிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அங்கே, இந்தியாவின் ஏதேனும் ஒரு மொழி, இங்கே இந்தி மட்டும்தான். மலையாளமோ, பஞ்சாபியோ படிக்க முடியாது இதுதானே பரிந்துரை, இது எப்படிச் சமத்துவமாகும்? நமக்கும், ஏதேனும் ஒரு இந்திய மொழி மூன்றாவது மொழி என்று சொல்லியிருந்தால் சமத்துவம் இருக்கிறது. இங்கே இந்திதான் நமக்கு. வேறு விருப்பம் தெரிவிக்கும் உரிமையில்லை அவர்களோ, சமஸ்கிருதம், குஜராத்தி என்று எந்த ஒரு மொழியையும் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். இது என்ன நீதி?**

இந்தி படித்தால் பணம் தருகிறேன் என்று சொல்வது, நம்மை விலைக்கு வாங்குவது ஆகாதா என்றே நாம் கேட்டோம்.

பிறகு கேந்திரிய வித்யாலயா, சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் எல்லாம் இந்தி இல்லையா என்று கேட்கிறீர்கள்.

இந்தியா முழுவதும் மாற்றுப்பணிகளுக்கு உட்பட்டவர்கள் (மீகூீணீஸீவெயீமீகூீணீதீறீமீ ழீஷீதீவ) பிள்ளைகளுக்காக உருவாக்கப்பட்டவை அவை. ஆனால் இன்று மெட்ரிகுலேஷன் பள்ளிகள் எல்லாம், சி.பி.எஸ்.சி.பள்ளிகள் ஆகிவிட்டன

1996ஆம் ஆண்டு தமிழகத்தில் 55 சி.பி.எஸ்.சி. பள்ளிகள்தாம் இருந்தன.

அம்மையார் முதல்வராக 2011இல் பதவியேற்றபின் அவற்றின் எண்ணிக்கை மளமளவென்று ஏறிற்று. இன்று இங்கு 941 பள்ளிகள் உள்ளன.

இப்படி வணிகமயமாக்கியது யார் என்பது குறித்துச் சிந்திக்க வேண்டாமா?

இந்திப் பிரச்சார சபாவில் ஆண்டுதோறும் 4 லட்சம் பேர் இந்தி படிக்கின்றனர் என்று பெருமையோடு சொல்கின்றீர்கள். நன்றாக படிக்கட்டும் யார் வேண்டாமென்றது?

இந்தித் திணிப்பை மட்டும்தான் நாம் எதிர்க்கிறோம். அடுத்ததாக நெஞ்சறிய ஒரு பொய்யைக் கூறுகின்றீர்கள்.

2015 வரையில் தமிழே படிக்காமல் ஒருவர் தமிழ்நாட்டில் எல்லாப் படிப்பையும் படிக்கலாம் என்ற நிலைமை இருந்ததா இல்லையா என்று கேட்கின்றீர்கள்.

அதாவது ஜெயலலிதா அம்மையார் வந்த பிறகுதான் தமிழ் கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டது என்பது போன்ற உண்மைக்கு முற்றிலும் மாறான ஒரு செய்தியை நீங்கள் தருகின்றீர்கள்.

எல்லாம் அறிந்த நீங்கள் 2006 ஜூன் மாதம், கலைஞர் ஆட்சியிலேயே தங்கம் தென்னரசு பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக இருந்தபோது, முதல் வகுப்பு தொடங்கி தமிழ் கட்டாயப் பாடம் ஆக்கப்பட்டதை அறியவில்லை போலும் நீங்கள்.

அல்லது அதனைச் சொல்ல மனமில்லையோ என்னவோ!

சரி, முதன்மையான சிக்கலுக்கு வருவோம். இந்தி கட்டாயம் கற்கப்பட வேண்டும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்கள்.

ஆனால் அதற்கு ஒரு வியாக்கியானம் தருகின்றீர்கள்.

இந்தி பேசும் மாநிலங்களிலும், மும்மொழிக் கொள்கை உள்ளதே என்கிறீர்கள். அங்கே தாய்மொழி, ஆங்கிலம், ஏதேனும் ஓர் இந்திய மொழி என்றும் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தி பேசாத மாநிலங்களில், தாய்மொழி, ஆங்கிலம், இந்தி என்று மூன்று மொழிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அங்கே, இந்தியாவின் ஏதேனும் ஒரு மொழி, இங்கே இந்தி மட்டும்தான். மலையாளமோ, பஞ்சாபியோ படிக்க முடியாது இதுதானே பரிந்துரை, இது எப்படிச் சமத்துவமாகும்?

நமக்கும், ஏதேனும் ஒரு இந்திய மொழி மூன்றாவது மொழி என்று சொல்லியிருந்தால் சமத்துவம் இருக்கிறது.

இங்கே இந்திதான் நமக்கு. வேறு விருப்பம் தெரிவிக்கும் உரிமையில்லை அவர்களோ, சமஸ்கிருதம், குஜராத்தி என்று எந்த ஒரு மொழியையும் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். இது என்ன நீதி?

எனவே கொல்லைப்புற வழியாக இந்தியை, அதன் தொடர்ச்சியாகப் பிற்காலத்தில் சமஸ்கிருதத்தைத் திணிப்பதுதான் இதன் நோக்கம். இதனைத் தமிழகம் ஒருநாளும் ஏற்காது, ஏற்கவும் கூடாது.

ஒருவர் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் தங்கள் விருப்பத்திற்கும், தேவைக்கும், திறமைக்கும் ஏற்பக் கற்றுக்கொள்ளட்டும், யாரும் தடுக்கவில்லை, ஆனால் மொழிகளைக் கற்றுக்கொள்வது மட்டுமே அறிவாகாது.

மொழி அறிவு சிறப்பானது தான் எனினும் மொழியின் மூலம் பெறும் அறிவே அதனினும் சிறப்பானது.

ஏதேனும் ஒரு வழியில் இந்தியை, அதன் வழி சமஸ்கிருதத்தை ஏன் திணிக்க விரும்புகின்றார்கள். அதற்கு உங்களைப் போன்றோர் ஏன் துணை போகின்றீர்கள். என்பதைத் தமிழகம் அறியும்.

சமஸ்கிருதம் என்பது வெறும் மொழி மட்டுமன்று.

அது ஒரு பண்பாட்டு வல்லாண்மை.

நன்றி ரங்கராஜ்! முடிந்தால் அந்தப் பாண்டேயை விட்டுத்தொலையுங்களேன், அது நீங்கள் படித்து வாங்கிய பட்டமில்லையே.

அன்புடன்

**சுப. வீரபாண்டியன்.**

நடந்த நாடாளுமன்ற தேர்தலில் தனித்துவம் காட்டிய தமிழக வாக்காளர்களே வணக்கம். இந்தியா முழுவதும் ஒரே மாதிரி நினைக்கையில் நீங்கள் மட்டும் தனி வழியில் சிந்தித்தது தமிழன் தனித்துவமானவன், தமிழ் இனம் தனி இனம், மற்றொரு இனம் எடுக்கும் முடிவை தமிழ் இனம் எடுக்கவேண்டிய அவசியமில்லை என்பதை காட்டிவிட்டீர்.

நேற்றிலிருந்து புரியாத புதிராக இருந்ததை யோசித்து யோசித்து விடைதேட முற்பட்டு ஒரு நண்பனின் பேச்சில் சிறு பொறி கிட்டியது.

ஆம், தமிழகத்திற்கு பிழைப்புத்தேடி வந்த குஜராத் ராஜஸ்தான் மார்வாடிகளை, பட்டேல் களை, ஜெயின்களை, சௌராஷ்டிரர் களை, சிந்திகளை பெரும் செல்வந்தர்களாக்கியது இந்த மண். நாங்கள் மட்டுமா ஆந்திராவிலிருந்தும் கேரளாவிலிருந்தும் வந்தவர்களை திராவிடத்தின் ஒருதாய் பிள்ளையாக அன்புடன் அரவணைத்துக் கொண்டவர்கள் நீங்கள். இன்றும் பீகாரிலிருந்து உபியிலிருந்து ராஜஸ்தானி லிருந்து மேற்குவங்கத் திலிருந்து தினம் வந்திறங்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வாழவைக்கும் மக்கள் நீங்கள் உங்களின் திராவிடக் குடும்பத்தின் அங்கமான ஆந்திராவிலும் கர்நாடகா விலும் ஆயிரக்கணக்கான வட இந்தியர்களை வாழவைக்கும் இனம் திராவிட இனம் என்பது நிதர்சனம்.

நான் அதிசயத்துப் போகிறேன் இந்த மண்ணைப் பார்த்தும் மக்களைப்பார்த்தும், யார் இந்த மண்ணை, மக்களை பண்படுத்தியது என்று!!!

மிகவும் வெளிப்படையாக சொல்கிறேன் நாங்கள் இங்கே வந்து வாழ்வதைப்போல் ஒருநாளும் எங்கள் மண்ணில் இவ்வளவு சுதந்திரமாக சௌகரியமாக வாழ்ந்துவிட முடியாது. தென்னகம் வந்து கெட்டவர்கள் யாருமில்லை.

எங்கள் மண்ணில் டாடா, பிர்லா, அம்பானி, அதானிகள் தான் உருவாயினர். எங்களைப் போன்றவர்களையும் தொழிலதிபர்கள் ஆக்கியது இந்த திராவிட மண்.

நாட்டில் இங்கு மட்டும் தான் எல்லா ஜாதி யிலும் என்ஜினியர்கள், டாக்டர்கள், அரசு அதிகாரிகள், நீதிபதிகள், தொழிலதிபர்கள் என நீக்கமற்ற நிறைந்துள்ளனர். நீங்கள் வேறு இடம்பெயர்ந்த தெல்லாம் அறிவுசார்ந்த சமுதாய மாக பல்துறை

# ஒரு மார்வாடியின் குரல்



நிபுணர்களாக சென்றீர்கள். இன்று உலகில் எந்த மூலையிலும் தமிழகத்தில் எந்த ஜாதியைச் சேர்ந்தவரும் துறை சார்ந்த நிபுணத்துவம் பெற்றவராக இருக்கிறார். எங்கள் மண்ணில் இப்படி சமத்துவம் இல்லையே, எங்களைப்போல் நீங்கள் கூப்பிடாமல் பிழைக்க சென்றவர்கள்கள் அல்ல, உங்கள் அறிவுசார் தேவை இருப்பதால் ஒரு "டிமாண்டின்" அடிப்படையில் சென்றவர்கள்.

இதையெல்லாம் எது உங்களுக்கு பெற்றுக் கொடுத்தது? ஆம் சமூகநீதி அடிப்படையில் நீங்கள் போராடி பெற்ற இட ஒதுக்கீட்டால், இதனால் பயன்பெறாத ஜாதி ஏதாவதும் உண்டா? இந்த மண்ணை பதப்படுத்த ஓடி ஓடி பணியாற்றிய நீதிக்கட்சி தலைவர்களின் வரலாற்றையும் காமராஜரின் தீர்க்கத்தையும் எண்ணிப்பார்க்கிறேன். உங்கள் ஊனில் உதிரத்தில் சுயமரியாதை நெருப்பை ஏற்றிய ஈரோட்டு பெரியாரை நினைக்கிறோம். ஒரு பண்படுத்திய மண்ணாக இல்லாமல் போயிருந்தால் எங்களைப் போன்ற காட்டுமிராண்டிகளாக இருந்திருந்தால் நாங்கள் எங்கு போய் பிழைத்து இந்த உயரத்தை தொட்டிருக்க முடியும். எங்கள் மண்ணில் ஒரு "பெரியார்" தோன்றியிருந்தால் தினம் தினம் இரயிலில் ஆயிரக்கணக்கான பேர் பிழைப்பு தேடி இங்கு வரவேண்டியது இல்லையே, சட்டம் ஒழுங்கு மட்டும் சரியில்லை என்றால் இங்கு கால் வைக்க முடியுமா?

திராவிடர்களே தமிழர்களே உங்களை வணங்கு கிறேன். நீங்கள் சுயமரியாதைக்காரர்கள். இணக்கமாக இருக்க என்ன அடிமைகளா? உரிமையைப் பெற எதற்கு ஆளுங்கட்சியாக இருக்கவேண்டும். இந்த தேர்தலில் நாடு முழுவதும் 37 சதவீதம் வாக்குகளை பெற்றுள்ளது. மீதி 63 சதவீதம் மக்களின் குரலாக "திராவிடர்" களின் குரல் அங்கே ஒலிக்கட்டும்.

இங்கு நீங்கள் பெற்றது இணக்கமாக இருந்தல்ல, போராட்டங்கள் மூலமே என்பதே வரலாறு.

உங்கள் தீர்ப்பை பரிகசிக்கவில்லை. எங்களுக்கு சோறுபோடும் எஜமானர்கள் நீங்கள் உங்கள் தீர்ப்பே எங்களின் தீர்ப்பு.

இந்த மண்ணுக்கும் "தமிழ் இனத்திற்கும்" என்றும் நன்றியுள்ளவர்களாக எங்கள் சந்ததியி னரை வளர்த்தெடுக்க வேண்டும்.

அன்புடன்...

**பிழைக்க வந்த மார்வாடி**




# அதிர்ச்சியான தகவல்!

ஒரு நாளிதழில் கோக்க கோலா முழுப்பக்க விளம்பரம் இருந்தது. எதுக்கு ஒரு பக்கத்துக்கு விளம்பரம் என உற்று நோக்கினால் கீழே நான்கு வரிகளில் சின்னதாய் சில விபரங்கள் அவைகள் கீழ் வருமாறு...

terms and conditions: contains no fruit added flavours artificial sweeteners. this carbonated water contains an admixture of #aspartame and #acesulfame_potassium. not recommended for children.

என்ன இது அஸ்பர்டேம்? என்ன இது அசேசல்பேம் பொட்டாசியம்?

குழந்தைக்கு உகந்தது அல்ல என்று வேறு இருந்தது! சரி என இணையத்தில் தேடிப்பார்த்தேன்.

இந்த இரு இராயணங்களும் சாதாரண தலைவலி முதல் மிகக்கொடிய புற்றுநோய் வரை நம் உடலில் ஏற்படுத்தக் கூடியது என்றும் அதோடு பல்வேறு நோய்கள், உடல் உபாதைகள் ஏற்படுத்தக்கூடியது என பட்டியல் நீண்டது.

குளிர்பானங்கள் ஏறக்குறைய பூச்சி மருந்துகளுக்கு சமம் என்று தெரிந்து, நண்பர்களோடு திரையரங்கு சென்றால் கூட அங்கு குளிர்பானம் வாங்கினால் அதன் தீங்கை எடுத்துச்சொன்னால், நம்மை ஏதோ வேற்றுகிரகவாசி போல் பார்க்கின்றனர்.

விவசாயத்துக்கு தண்ணி இல்ல.. குடிக்க நிலத்தடி தண்ணி கிடையாது கேன் தண்ணிதன், இவ்வளவு பிரச்சனை நாட்டுக்கு! பல நோய் பிரச்சனை உடலுக்கு!

செய்தி : **க. பவானி, சென்னை.**

# ஜெய்சங்கர் நடித்த மார்டன் தியேட்டர் படம் மாதிரியே கீது



யார் இந்த அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய் சங்கர் ஒரு பழமைவாத சித்தாந்தவாதி 1977களில் சோவியத் யூனியனில் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரியாகப் பணியாற்றிய அவர் தொடர்ச்சியாக அமெரிக்கா, செக் குடியரசு, சீனா, சிங்கப்பூர், என பல நாடுகளில் இந்திய வெளியுறவுத்துறையில் அதிகாரியாக செயல்பட்டுள் ளார்.

நரேந்திர மோடி பிராதமர் ஆன பின்பு, அவருக்கு அமெரிக்கா மறுத்த விசாவை மீண்டும் கிடைக்கச் செய்தது இந்த ஜெய்சங்கர்.

அமெரிக்காவின் ஹைடு சட்டத்தின் அடிப் படையில் இந்திய அரசியலமைப்பை மீறிய அணு சக்தி ஒப்பந்தத்தில் இந்தியாவைக் கையெழுத்திட அமெரிக்காவுடன் இணைந்து செயலாற்றிய அதிகாரி இவர் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் மீது இவரது தொடர்ச்சியான அழுத்தத்தின் காரணமா கவே இந்தியா அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந் தத்தில் கையெழுத்திட்டது என்று சொல்லப்படுகிறது.

இவரது பல்வேறு அணுகுமுறைகள் மனித மாண்புகளை மீறிய செயலாகவே இருந்துள்ளன. உதாரணத்திற்கு 2015 ஆம் ஆண்டு நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை தொடர்ந்து நேபாளத் திற்குத் தேவையான பெட்ரோல், மருந்துகள் உள்ளிட்ட அடிப்படையான பொருள்களையும் நேபாளம் செல்ல விடாமல் தடுத்ததுடன், அந்த நாட்டின் கம்யூனிச அரசாங்கம் கட்டமைத்த அரசியலமைப்பு சாசனத்தில் தனக்குத் தேவையான திருத்தங்களைச் செய்தாலொழிய உங்களுக்கான எந்த ஒரு உதவியும் கிடைக்காது என மனிதத் தன்மையற்ற முறையில் நடந்து கொண்டவர். நேபாளத்திற்குக் குவிந்த அத்துணை நிவாரணப் பொருட்களையும் கல்கத்தாவில் தேக்கி வைத்துக் கொண்டு தொடர்ச்சியான நிர்பந்தத்தை நேபாளத் தில் உருவாக்கியவர் என்கிறார்கள்.

இந்தச் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்த நரேந்திர மோடியின் முழு ஒப்புதலுடன் இந்த நிர்பந்தம் அந்த நாட்டினுடைய சுதந்திரத்தின் மீது வலுக்கட்டாயமாகச் செலுத்தப்பட்டது. எல்லை அடிப்படையில் இந்திய அரசை மட்டுமே சார்ந் திருக்க வேண்டிய நிர்பந்தத்தில் உள்ள நேபாளம் வேறு வழியின்றித் தனது அரசியலமைப்பு சாசனத்தில் இந்தியா நிர்பந்தித்த திருத்தங்களை ஏற்றுக்கொண்டது. அதற்காக அவசரமாக நாடாளு மன்றத்தைக் கூட்டிப் பெரும்பான்மையை நிருபித்து சாசனத்தில் திருத்தம் உருவான பின்பே நேபாளத் திற்குள் உலக நாடுகள் அனுப்பிய நிவாரணப் பொருட்கள் நுழைந்தன.

இத்தகைய மனிதத் தன்மையற்ற ஒரு மனிதர் இந்தியாவினுடைய வெளியுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பது இந்தியாவின் அவமானங் களில் ஒன்று என்று கூறப்படுகிறது.

இந்தியாவின் அற்புதமான வெளியுறவுக் கொள்கை யான அணிசேராக் கொள்கைக்கு எதிரான ஒரு மனிதர் இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியிருக்கிறார்.

இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பிய அப்போதைய இந்திய வெளியுறவுத் துறையில் இருந்த பார்த்தசாரதியின் தலைமையில் பணியாற்றிய இளைஞர்தான் சுப்பிரமணியன் ஜெய்சங்கர் என்கி றார்கள்.

கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் அமல் படுத்தப் பட்ட ஆதார் கார்ட் திட்டங்களை வரை முறைப் படுத்தி டி.சி.எஸ்.இந்நிறுவனத்தின் குளோ பல் சி.இ.ஓ. ஆக இருந்தவர் சுப்பிரமணியன் ஜெய் சங்கர் என்கிறார்கள்.

இந்த சுப்பிரமணியன் ஜெய்சங்கர் இப்பொழுது மத்திய அமைச்சரவையில் கேபினட் அமைச்சர் களில் ஒருவராக பதவி ஏற்றிருக்கிறார்...

# பா.ஜ.க.வை முந்திய நோட்டா!

## ஆந்திராக்காரன் நம்பளவிட கோவத்தில இருந்திருக்கான் 25ல் 18 தொகுதிகளில் பா.ஜ.க.வை முந்திய நோட்டா!

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள் வெளியானது. அதில் பாரதிய ஜனதாக் கட்சி பெரும்பான்மை தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை தக்கவைத்தது. எனினும், ஆந்திரா, கேரளம், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாவட்டங்களில் பா.ஜ.க. ஒரு தொகுதியில் கூட வெற்றிபெற முடியவில்லை. குறிப்பாக, ஆந்திராவில் பா.ஜ.க.போட்டியிட்ட 24 தொகுதிகளில் 18 தொகுதிகளில் நோட்டா பெற்ற வாக்குகளை விட குறைவான வாக்குகள் பெற்று தோல்வியைத் தழுவியுள்ளது. வாக்கு சதவீதத்தை குறிப்பிடுகையில் நோட்டாவை விட பா.ஜ.க. குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளது. அதிக பட்சமாக அரக்கு தொகுதியில் 17,867 வாக்குகளை பா.ஜ.கவும், 47,977 வாக்குகளை நோட்டாவும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பா.ஜ.க.நோட்டாவுக்கு குறைவாக வாக்குகள் வாங்கிய தொகுதிகள் வாக்கு எண்ணிக்கை மற்றும் வாக்கு விழுக்காடு விவரம்.

ஆந்திர பிரதேசம்

அமலாபுரம்
பா.ஜ.க 11516 (0.94%)
நோட்டா 16,449 (1.34%)

அனக்காபள்ளி
பா.ஜ.க 13276 (1.07%)
நோட்டா 34,897 (2.82%)

அனந்தபூர்
பா.ஜ.க 7604 (0.57%)
நோட்டா 16,466 (1.23%)

அரக்கு
பா.ஜ.க. 17,867 (1.66%)
நோட்டா 47,977 (4.46%)

பாபட்லா
பா.ஜ.க 10,351 (.0.825)
நோட்டா 13,218 (1.04%)

சித்தூர்
பா.ஜ.க. 10,496 (0.8%)
நோட்டா 13,218 (1.04%)

எலுரு
பா.ஜ.க 8,412 (0.63%)
நோட்டா 23,880 (1.8%)

ஹிண்டுபூர்
பா.ஜ.க 13,805 (1.03%)
நோட்டா 17,428 (1.3%)

கடப்பா
பா.ஜ.க 4,085 (0.33%)
நோட்டா 14,692 (1.2%)

காக்கிநாடா
பா.ஜ.க. 9,596 (0.78)
நோட்டா 17,153 (1.3)

மச்சிலிபட்டணம்
பா.ஜ.க 6,462 (0.52%)
நோட்டா 14,077 (113%)

நெல்லூர்
பா.ஜ.க 12,513 (0.93%)
நோட்டா 17,171 (1.33%)

ஓங்கோலெ
பா.ஜ.க. 8,229 (0.61)
நோட்டா 20,865 (1.55)

ராஜமுந்திரி
பா.ஜ.க 12,334 (0.99)
நோட்டா 18,087 (1.45)

ஸ்ரீகாக்குளம்
பாஜக 8,390 (0.72)
நோட்டா 25,545 (2.21)

திருப்பதி
பா.ஜ.க. 16125 (1.23)
நோட்டா 25781 (1.96)

விழியநகரம்
பா.ஜ.க. 7,266 (0.66)
நோட்டா 29,501 (2.42)

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**



தமிழ்த்தேசிய பேரியக்கத்தின் தலைவர். மதிப்புமிகு பெ. மணியரசன் அவர்களை
அறநெறி மக்கள் கட்சியினர் வரவேற்றனர்.



MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

